# பொது அறிவு மஞ்சரி

# GENERAL KNOWLEDGE DIGEST

இலங்கை, உலக நாடுகளின்
அண்மைக்கால, நடப்பாண்டு விவகாரங்களுடன் கூடியது

சகல அரசினர் போட்டிப் பரீட்சைகளுக்குமுரிய
வழிகாட்டி

தொகுப்பாளர்
தி. ந. பஞ்சாட்சரம்

1761

விலை: ரூபா 60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு மஞ்சரி

இலங்கை, உலக நாடுகளின் அண்மைக்கால நடப்பாண்டு
விவகாரங்களுடன் கூடியது

அரசினர், ஆசிரிய,
மற்றும் தெரிவுப் பரீட்சைக்காகிய

திருத்திப் புதுக்கிய
## விசேட பதிப்பு

பரீட்சைக்கு வேண்டிய விடயங்களே
இந்நூலில் இடம் பெறுகின்றன

தொகுப்பு :

த. ந. பஞ்சாட்சரம்

காந்தளகம் — யாழ்ப்பாணம்.

1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1963
இரண்டாம் பதிப்பு: 1968
திருத்திய மூன்றாம் பதிப்பு: 1970
விசேட பதிப்பு: 1981
புதுக்கிய விசேட பதிப்பு: யூலை, 1984
புதுக்கிய விசேட பதிப்பு II: பெப், 1992

அச்சுப் பதிவு: யாழ் புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்

விற்பனை உரிமை: ஆக்கியோனுக்கே

விலை: 60.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

உங்கள் பரீட்சைக்கு வரக்கூடிய விடயங்கள் எதுவாக விருக்கக்கூடுமென்பதைக் கருத்திற்கொண்டே இந்நூல் புதுக்கித் திருத்தித் தொகுக்கப் பெற்றுள்ளது. எனவே சாதாரணமாகப் பொது அறிவு நூல்களில் வரக்கூடிய பல அம்சங்கள் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன.

மேலும் பரீட்சைக்கு வரக்கூடிய விரிவான மாதிரி வினாப்பத்திரம் ஒன்றும் விடையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பரீட்சார்த்திகள் பரீட்சைத் தினம் வரையும் வெளிவரும் நாளிதழ்கள், வானொலி நிகழ்ச்சிகள், மற்றும் பொது சஞ்சிகைகளை வாசித்தல் மிகுந்த பயனை அளிக்கவல்லது.

இந் நூலையும் பலமுறை வாசித்துப் பயிற்சி செய்து பயனடைக.

இந்நூலினைக் குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சேற்றி வெளிவர உறுதுணையாயிருந்த யாழ் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினர் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றி உரித்தாகுக!

நீர்வேலி
2. 2. 1992

த. ந. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

கீழ்வருவன நம்நாட்டின் பல்வேறு இலக்கியப் படைப்புக்களில் வரும் சில வாக்கியங்களாக அல்லது பொதுவாக எடுத்தியம்பப்படும் நீதிக் கூற்றுக்களாக அமைந்துள. அவற்றில் சில சொற்கள் அல்லது சொற்றொடர்கள் நீக்கப்பட்டுள்ளன. அவற்றைக்கொண்டு இடைவெளிகளைப் பூர்த்திசெய்க.

1. .................................................................................... பிச்சை புகினும் கற்கை நன்றே.

2. மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்,
.................................... கற்றோன் ....................................

3. .................................................................................... கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

4. ....................................................சென்ற இடமெல்லாம் சிறப்பு.

5. .................................................... யாவரும் கேளிர்.

6. கற்றதனலாய பயனென் கொல் ............... ...............
........................ ........................ ............ ............

7. கற்பவை கற்றுக் ........................

8. பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்
................................................................

9. ........................................... இகழேல்,

10. ........................................... கனம்பண்ணு.

11. ........................................... சீரியரே!

12. சங்கு சுட்டாலும் ........................

13. கற்றூண் பிளந்திறுவதல்லால் ........................................

14. இட்டார் பெரியோர் ........................................ தோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ........................................................ தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்.

16. மக்கள் குரலே ..................................

17. இளமையிற் கல்வி ..................................

18. ........................................................ ஐம்பதில் வளையுமா ;

19. ஓதாதார்க்கில்லை ..................................

20. அறிவுடை ஒருவனை ..................................

21. ........................................................ னௌத்திரி.

22. ........................................................ உன்னால் இருந்தேன்.

23. தான் கற்ற நூலளவேயாகுமாம் ..................................

24. ..................................

எல்லா உயிரும் தொழும்

25. ........................................................ கற்றிலனாயிற் கீழிருப்பவனே.

## விடைகள்

1, கற்கை நன்றே, கற்கை நன்றே, 2. மன்னனிற்—சிறப்புடையன். 3. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் 4. கற்றோர்க்குச். 5. யாதும் ஊரே. 6. வாலறிவன் நற்றாள் தொழார் எனின். 7. கற்றாங் கொழுகுக. 8. தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும். 9. எண்ணெழுத். 10. பெரியோரைக் 11. சீரியர் கெட்டாலும் 12. வெண்மை தரும். 15. பெரும் பாரம் தாங்கின் தளர்ந்து வளையுமோ தான் .14. இடாதார் இழிகுலத். 15. தளரா வளர் தெங்கு 16. மகேசன் குரல். 17. சிலையில் எழுத்து 18. ஐந்தில் வளையாதது. 19. யுணர்வொடு ஒழுக்கம். 20. அரசும் விரும்பும். 21. சான்றோர். 22. இருந் தமிழே. 23. நுண்ணறிவு. 24. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி 25, மேற்பாலொருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

**பின்வருவனவற்றை முதலில் கண்டுபிடித்த அல்லது ஆரம்பித்த பெருமை எவரை அல்லது எத்தேசத்தைச் சாரும்?**

1. அச்சுயந்திரம் — ஜோன் கூற்றறி பேர்க்
2. முதன் முதலில் அச்சடிக்கும் முறை — சீனர்
3. வெடிமருந்து — சீனர்
4. திசையறி கருவி — சீனர்
5. அணுக்குண்டு — ஒற்ரோ ஹான் (1941)
6. தபால் தலைப்புக்கள் — சேர். றோலண்ட்கில், (ஆங்கிலேயர்)
7. மடக்கை வாய்ப்பாடு — சேர். ஜோன் நப்பியர்
8. மின் சக்தி (மின்னோட்டம்) — வொல்ரா
9. டீசல் யந்திரம் — டீசல்
10. பெற்றோல் யந்திரம் — டெயிம்லர்
11. நிழற்படக் கருவி — எல். ஜே. எம். டாகுரே
12. நிழற்பட பிலிம்ஸ் றோல் (Roll Film) — ஜோர்ஜ் ஈஸ்ற்மன்
13. நிற நிழற்படம் (Colour Photography) — கப்றியல் லிப்டின்
14. ஒலிப்பதிவுக் கருவி — வால்டெமர் போல் சென்
15. ரி. வி. — ஜோன் லோஜி பெயர்ட் (1925)
16. ரிரான்சிஸ்ரர் — டபிள்யூ. ஷொக்லி
17. தொனி பெருக்கி — பேர்லினர்
18. றேடார் கருவி — சேர் றொபேற் வாற்சன் வாற்
19. ஹெலி கொப்டர் — பிறிகுவே (1909)
20. ஊற்றுப்பேனா — உவாற்றமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. முதற் புகையிரத யந்திரம் — ஜோர்ஜ் ஸ்ரீபின்சன்
("றொக்கெற்" என அது அழைக்கப்பட்டது.)

22. டைனமோ — மைக்கெல் பரடே

23. டைனமைற் — அல்பிரட் நோபல்

24. இரும்பின் உபயோகம் — கிற்றைறற்ஸ்

25. இரும்பை உருக்கி உருக்கு இரும்பாக்கும் முறை — பெஸமர்

26. தொலைபேசி — அலெக்சான்டர் பெல்

27. கம்பியில்லாத் தந்தி — (வயலெஸ்) மார்க்கோனி

28. தூரதிருஷ்டிக் கண்ணாடி — கலிலியோ

29. நைலோன் — W. H. கரோதேர்ஸ்

30. துவிச்சக்கர வண்டி — கேர்க் பற்றிக் மக்மில்லன்

31. கிழக்கேவரும் கப்பல் பாதை — வஸ்கொடகாமா

32. பிராணவாயு — பிறிஸ்லி

33. மேர்கரி உஷ்ணமானி — பரநீற்

34. பிரெயில் எழுத்துமுறை — லூயி பிரெய்ல்
குருட்டுப்பிள்ளைகள் வாசிப்பதற்கு

35. தட்டச்சு இயந்திரம் — ஷோல்ஸ்

36. தையல்மெசின் — எலியாஸ் கோவ்

37. அமெரிக்காவைக் கண்டுபிடித்தமை — கிறிஸ்ரோபர் கொலம்பஸ்

38. பூமியின் கவரும் சக்தி — சேர் ஐசாக் நியூற்றன்

39. இரிடியம் — 1803ல் டெஸ்கொற்றில்ஸ்சும் ரெனன்ற் என்பவரும்

40. தாவரங்களுக்கு உயிர் உண்டென நிரூபித்தமை —
சேர். ஜே. சி. போஸ்

41. நவீன சட்டமுறைகளை வகுத்தமை — உரோமர்

42. நவீன முறையில் பெருஞ்சாலைகளை அமைத்தமை — உரோமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. சனத்தொகை வளர்ச்சி பற்றிய கோட்பாடு — மால்தஸ்

44. ஒலிம்பிக் விளையாட்டுக்கள் — கிரேக்கர்

45. வருடத்தை 365 நாட்களாக வகுத்தமை — எகிப்தியர்

46. பட்டுநூல் நூற்றல், நெய்தல் — சீனர்

47. சனநாயக (குடியாட்சி) முறைக்கு முன்னோடிகள் — அதென்ஸ் நகர இராட்சியம்

48. "பிஜி" தீவுகளை கண்டுபிடித்தவர் — ராஸ்மன்

49. தேயிலையின் உபயோகத்தை முதல் அறிந்தவர்கள் — சீனர்

50. பசுபிக் சமுத்திரத்தில் முதல்முதற் பிரவேசித்த ஐரோப்பியர் — பேடினன்ட் மகலன் (போத்துக்கீசர்)

51. நாணயத்தின் உபயோகத்தை முதலில் மேற்கொண்டவர்கள் பாரசிகர்

52. நியூமாற்றிக் டயர்கள் — ஜோன் பொயிட் டன்லப்

53. சீமெந்து — ஜோன் சிமிற்றன்

54. நீராவிக் கப்பல் — றொபேட் புல்ரன்

55. இயந்திரத் துப்பாக்கி — கற்லிங்

56. மின்சக்தி நெய்தல் தறி — காட்றைற்

57. சுழல் துப்பாக்கி — ஹொல்ற்

58. நீராவி யந்திரம் — ஜேம்ஸ் வாட்

59. கல்குலேட்டர் — பி. பர்ஸ்கார்

60. எலெக்றோன்ஸ் — ஜே. ஜே. தொம்ஸ்சன்

61. றேடார் (Radar) — சேர் றொபேட் வாற்சன் வாற்

62. டாங்கிகள் (Tanks) — சுவின்ரன்

63. உளர்சார்பு — புத்திப் பரீட்சை முறை — பைநெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. நீர்மூழ்கிக் கப்பல் — புஸ்நெல்

65. கடல், சமுத்திரம் ஆகியனவற்றின் கீழ் நிழற்படம் எடுத்தல் — எட்ஜேர்ரன்

66. லேசர் — Dr. T. H. மைமன் & Dr. ஜில்பேற் யங் (1960)

67. புவி அதிர்ச்சி, நடுக்கம் ஆகியவற்றை அளக்கும் கருவி — செய்ஸ்மோகிராப் : றொபேற் மலெற்

68. ஜீவசத்துக்கள் (Vitamins) — பங் (Funk)

69. வைத்தியர்கள் உபயோகிக்கும் ஸ்ரெதஸ்கோப் — Stethoscope — லெநொக் (1816)

70. மனித உடலுக்கு இரத்தம் ஏற்றும் முறை — கார்ல் லாண்ஸ் ரெயினர், சேர் ஜேம்ஸ் கரிசன்

71. டி. டி. ரி.; Dr. போல் முல்லர்

72. இருதய மாற்றுச் சிகிச்சை — Dr. கிறிஸ்ரியன் பேர்னாட்

73. நவீன ஆங்கில சுருக்கெழுத்துக் கலை — சேர் ஐசாக் பிற்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

**இலங்கை தொடர்பாக நீர் அறிந்திருக்கவேண்டிய சில பிரதான விடயங்கள் — இவை பரீட்சைக்குரியவை**

1. புராதன இலங்கையின் முதற் தலைநகரம்: ஏறக்குறைய 1000 ஆண்டுகள் — கி. பி. 1017 வரை அனுரதபுரி

2. இலங்கையில் பௌத்தமதம் பரவுவதற்கு வழி செய்தவர்: மகிந்தன் — அசோகச் சக்கரவர்த்தியின் மகன்

3. முதன் முதல் பெருங்குளங்களைக் கட்டுவித்த சிங்கள அரசனின் பெயர்: வசபன் (11 குளம், 12 கால்வாய்)

4. அடுத்து பாரிய குளங்கள் கட்டிய பெருமைக்குரிய மன்னன்: மகாசேனன்

5. மின்னேரியா குளத்தைக் கட்டுவித்தவர்: மகாசேனன்

6. பொலநறுவையைத் தலைநகரம் ஆக்கியவர்: சோழர்

7. சிகிரிய கோட்டையை அமைத்தவன்: காசியப்பன்

8. இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் இருகாப்பியங்கள்: இராமாயணம் மகாவம்சம்

9. கற்காலச் சான்றாக அமைந்துள்ள கற் கட்டிடம் எங்கே உள்ளது? பதிய கம்பளையில்

10. இலங்கையைத் தரிசித்த முதல் ஐரோப்பியர்: மார்க்கோபோலோ

11. இலங்கையைத் தரிசித்த முதல் அராபியர்: இபின்பற்றூற்றா

12. இலங்கையில் கத்தோலிக்க கிறிஸ்தவத்தைப் புகுத்தியவர்கள்: போத்துக்கேயர்

13. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்த ஆண்டு: 1505. தரிசித்த முதற் போத்துகேயன்: லொறங்கே டீ அல்மீடியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இலங்கையில் புரட்டஸ்தாந்த கிறிஸ்தவத்தைப் புகுத்தியவர்: ஒல்லாந்தர்.

15. இன்றும் நம்நாட்டில் வழங்கும் சில போர்த்துக்கீச சொற்கள்: ஆயா, மேசை, கோப்பை, பீலிசு, சம்பாத்து ஆகியன.

16. ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சிபுரிந்தமைக்குச் சான்றாக விளங்கும் சின்னங்கள் :

(அ) உரோம — டச்சுச் சட்டங்கள்.

(ஆ) அவர்கள் கட்டிய கோட்டைகள் — ஊர்காவற்றுறையிலுள்ள கமன்கில் கோட்டை, யாழ். மறியற்சாலைக் கோட்டை.

(இ) இவர்களால் எழுதப்பெற்ற தோம்புகள். (காணி டாப்புகள்)

(ஈ) லைடன், டெல்ப்ற், கயிற்ஸ் ஆகிய இடப்பெயர்கள்.

17. இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சி எப்போது ஆரம்பமானது? 15 — 2 — 1796.

18. முதலில் நியமிக்கப்பட்ட ஆங்கிலேய ஆளுநர் யார்? பிரெடெரிக் நோர்த் — 1798 இல்.

19. இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக எவ்வாண்டில் வந்தது? — 1802 இல்.

20. ஆங்கிலேயரால் கண்டி இராச்சியம் எப்போது கைப்பற்றப்பட்டது? 2 — 3 — 1815 இல்.

21. "மகாபோதி சங்கம்" எப்பணியில் உழைப்பதற்கென நிறுவப்பட்டது? பௌத்தமத மறுமலர்ச்சிக்கு.

22. இலங்கைச் சரித்திரத்தில் 1819 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்ச்சி : பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கண்டிய எழுச்சி.

23. கொழும்பு — கண்டி வீதி எவ்வாண்டில், எவரால் கட்டப்பட்டது? 1820 இல், எட்வெட் பார்ன்ஸ் என்பவரால்.

24. கொழும்பு — கண்டி புகையிரதப் பாதை எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1867 இல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பௌத்த, சிங்கள மறுமலர்ச்சிக்கு உழைத்த இரு பெரியார் கள் : அநாகரிக தர்மபாலா. வலிசிங்க ஹரிச்சந்திரா.

26. இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியார் : சித்திலெப்பை.

27. " திரிபிற்றக " யாது? — பௌத்தமத நூல்.

28. நம் நாட்டு மக்கள் சர்வசன வாக்குரிமையை எவ்வாண்டில் முதலில் உபயோகித்தனர்? 1931 இல்.

29. இலங்கையின் இறுதிப் பிரித்தானிய ஆளுநர்: சேர். ஹென்றி மேசன் மூர். இவரே சுதந்திரம் பெற்றபின்னர் முத லாவது மகாதேசாதிபதியாகவும் கடமை புரிந்தார்.

30. நம் நாட்டின் இரண்டாவது மகாதேசாதிபதி: சோல்பெரி பிரபு.

31. மூன்றாவது தேசாதிபதி: சேர். ஒலிவர் குணதிலகா. (இவரே இப்பதவியை வகித்த முதலாவது இலங்கையருமாவர்.)

32. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி: வில்லியம் கோபலாவ

33. இலங்கை ஐ. நா. ஸ்தாபனத்தில் எவ்வாண்டில் உறுப்புரிமை பெற்றது? 1955 இல்.

34. இலங்கையின் சரித்திர, சமூக, கலாச்சார அம்சங்களை விளக்கி ஆங்கில மொழியில் நூல் எழுதிய சில ஆங்கிலப் பெருந் தகைகள்:

(அ) றொபேற் நொக்ஸ்

(ஆ) ஜோன் ஸ்ரில்

(இ) லியனெட் வூல்ப்

35. " சேனநாயக்க சமுத்திரம் " எனப்படுவது : கல்லோயாத் திட்டத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான நீர்த்தேக்கம்.

36. இலங்கையில் முதன் முதலாகத் தோன்றிய அரசியற்கட்சி: இலங்கைத் தேசிய காங்கிரஸ். 1819 இல். முதல் தலைவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. பின்வருவன யாவை?

(அ) கபடம் — அரசனுக்குரிய நிலம்.
(ஆ) நிந்தகம் — அரச அதிகாரிகளுக்கு வழங்கிய நிலம்.
(இ) தேவாலயம் — ஆலயங்களுக்கு வழங்கிய நிலம்.
(ஈ) விகாரகம் — விகாரைகளுக்கு வழங்கிய நிலம்.

38. சிங்கள மொழியில் முதல் எழுதப்பட்ட அகராதி: சுமங்கள அகராதி. எழுதியவர்: சோரட்ட தேரோ.

39. 1915இல் இலங்கையில் ஏற்பட்ட வகுப்புவாத கலவரப் பொழுது பாதிக்கப்பட் இனங்கள்;
சிங்களவர், முஸ்லிம்கள்.

40. இலங்கையில் (I) கோப்பிச் செய்கையைப் புகுத்தியவர்: ஒல்லாந்தர் (II) தேயிலைச்செய்கையைப் புகுத்தியவர்: ஆங்கிலேயர்.

41. இப் பதங்களால் குறிக்கப்படுவன; "தாமரபர்ணி", இலங்கை, "யாப்பாபட்டுன", யாழ்ப்பாணம்.

42. இன்றும் கண்டியில் வருடாவருடம் நிகழும் "பெரஹரா"வை முதலில் ஆரம்பித்தவர்: கீர்த்தி ஹீமேவன்.

43. பின்வரும் குளங்களைக் கட்டுவித்தவர்கள்:
மின்னேரியா — மகாசேனன்
கந்தளாய் — இரண்டாம் அக்ர போதி
காலவாவி — தாதுசேனன்

44. பின்வருவனவற்றைக் கட்டியவர்கள்;
அபயகிரி விகாரை — வலகம்பா.
லோவ மகாபாயா — கைமுனு
றுவான் வெலிசேயா — கைமுனு

45. மிகிந்தலை மலையின் விசேடம்:
தீசன் மகிந்தனைச் சந்தித்த இடம்.

46. புராதன இலங்கையில் கிராம சபைகள் "கம்சபா" என அழைக்கப்பட்டன.

47. மகாபராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் இலங்கை "கிழக்குலகின் தானியக் களஞ்சியம்" என அழைக்கப்பட்டது. இக்காலம் இலங்கையின் வரலாற்றில் "பொற்காலம்" எனவும் போற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. கோட்டை இராட்சிய மன்னன் கத்தோலிக்க மதத்திற்கு மாறி "டொன்யுவான்" என்ற பெயருடன் விளங்கினான். எனவே இவனை "டொன்யுவான் தர்மபாலா" என அழைத்தனர்.

49 இலங்கையைப் பரிபாலித்த மிகக் கொடூரம், கெடுபிடியுடைய போர்த்துக்கீச தளபதியின் பெயர் : அசிவீடோ.

50. பிரித்தானியரின் ஆட்சிக்கெதிராக எழுந்து உயிர்நீத்த கண்டிய திசாவை : கெப்பிற்றபோல திசாவை.

51. வன்னிப் பிரதேசத்தில் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக எழுந்து உயிர் நீத்தவர் : பண்டாரவன்னியன்.

52. இப்போ நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு எப்போ நடைமுறைக்கு வந்துள்ளது : 7-9-1978. இதன்படி நிர்வாக ஜனாதிபதி ஆட்சிமுறை நிறுவப்பட்டது.

53. இலங்கை எப்போது எச்சந்தர்ப்பத்துடன் குடியரசாக மாறியது? 22-5-1972இல் நடைமுறைக்கு வந்த புதிய அரசியல் யாப்புடன் நாடு "குடியரசு" ஆக மாறியது.

54. திருகோணமலையிலுள்ள வெளிநாட்டினரின் மா ஆலையின் பெயர் : பிறிமா ஆலை.

55. நம் நாட்டில் இன்றுள்ள பல்கலைக்கழகங்களின் தொகை: ஆறு

56. நாட்டின் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற ஆண்டு : 1-12-1960.

57. இலவசக் கல்வி நாட்டில் புகுத்தப்பட்டமை : 1-10-1945.

58. இலவசப் புஸ்தக விநியோகம் ஆரம்பிக்கப்பட்டமை : 1980.

59. தனிச்சிங்களம் சட்டபூர்வமாக்கப்பட்டமை : 5-6-1956.

60. எத் தனியார் நிறுவனத்தினரால் இலங்கையில் உள்ளூர் விமானசேவை நடாத்தப்பட்டது?
உபாலி நிறுவனம்.

61. மாவட்ட அமைச்சர்களின் தொகை : 24

62. இலங்கையிலுள்ள மாவட்டங்கள் தொகை : 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. உணவு முத்திரையைப்பெற உரித்துடையோர் : ரூபா 600/- மாத வருவாய் அல்லது அதற்குக் குறைந்தவர்கள்.

64. ''லக்சலா'' என்பது : நம் நாட்டின் சுதேச கைத்தொழிற் பொருட்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருக்கும் காட்சி நிலையமும் கடையுமாகும்.

65. பின்வருவோரின் புகழ் எதில் தங்கியுள்ளது?

(அ) தேவசூரியசேனா (ஆ) குணயா — இலங்கையின் சுதேச நடனக்கலையில்.

66. பிரபல சிங்கள நாவலாசிரியர்கள் மூவர் :

(1) டபிள்யு. எ. சில்வா

(2) ஹேமபாலா முனிதாசா

(3) மாட்டின் விக்கிரமசிங்கா

67. ஜோர்ஜ் கெயிற் எனபவர் யார்? அவரின் புகழ்: நம் நாட்டில் தலைசிறந்த ஓவியர்களில் ஒருவர்

68. நம் நாட்டின் சிறந்த ஓவியரென சர்வதேச புகழ் பெற்ற இளைஞன் : சேனக்க செனநாயக்கா.

69. இலங்கையில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி உள்ள பிரதேசம் : வட்டவளை

70. இலங்கையில் அதிக உஷ்ணமுடைய இடங்கள் : வட சமவெளி, அம்பாந்தோட்டை

71. இலக்கையில் மிகக் குளிர்ந்த இடம் : கந்தப்பளை

72. இலங்கையில் தம் ஆட்சிக்காலத்தில் டச்சுக்காரர்கள் வெளியிட்ட நாணயத்தில் அச்சிடப்பெற்ற எழுத்துக்கள் V. O. C. (வி. ஓ. சி.)

73. இலங்கையில் வனவிலங்குகளுக்கெனப் பசதுகாப்பாக ஒதுக்கப் பட்ட தேசியவனப் பிரதேசம் :

வில்பற்று, யாலா; மகாவலி பிரதேசத்தில் — மதுறுஓயா பூங்கா; இது 1983-ல் அமைக்கப்பட்டது.

74. கெலனியாவிலுள்ள பௌத்த விகாரையின் பெயர் : இராஜமகாவிகாரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. இலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சிகளின் பெயர்கள் :
   1. அபடீன்
   2. டுண்கிண்டா
   3. டியலுமா
   4. லக்சபானா

பின்வருவன நம் நாட்டில் எங்குள ?

76. உருக்குத் தொழிற்சாலை — ஓருவெல

77. கைத்தொழிற்பேட்டை — எக்கல, அச்சுவேலி

78. ரயர் தொழிற்சாலை — கெலனியா

79. சீமேந்து தொழிற்சாலை — காங்கேசன்துறை, புத்தளம் காலி.

80. யப்பானுடன் இணைந்து அமைக்கப்படும் சீமெந்து தொழிற்சாலை — திருகோணமலை; கொட்பேயில் (Cod Bay)

81. மட்பாண்டத் தொழிற்சாலை — பிலியந்தல

82. இரசாயனத் தொழிற்சாலை — பரந்தன்

83. காகித ஆலை — வாழைச்சேனை, இம்பிலிப்பிற்றியா

84. ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை — ஜின்தோட்டை

85. ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் — நாவின்ன

86. இரப்பர் ஆராய்ச்சி நிலையம் — அகலவத்தை

87. தேயிலை ஆராச்சி நிலையம் — தலவாக்கொல்லை

88. தெங்கு ஆராச்சி நிலையம் — லுணுவில

89. கட்டிப்பாற் தொழிற்சாலை — பொலநறுவை

90. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் — சப்புகஸ்கந்த

91. புதியபாராளுமன்றம் அமைந்துள்ள இடம் : கோட்டை (ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம்)

92. புகையிரதத் தொழிற்சாலை — இரத்மலானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. குஷ்டரோக வைத்தியசாலை — கெந்தல

94. புற்றுநோய் ஆராய்ச்சி நிலையமும் வைத்திய சாலையும் — மகரகம

95. அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி — பொரல

96. அரச அங்கீகாரம்பெற்ற தனியார் மருத்துவக்கல்லூரி கொழும்பு வடக்கு. (ராகமை)

97. பின்வரும் இடங்களிலுள்ள கிறிஸ்தவ மத தொடர்பான நிலையங்களின் பெயர்கள்:

(அ) வசாவிளான் — றோசேரியன் குருமார் மடம்

(ஆ) பரந்தன் — நவஜீவனம்

(இ) மருதனாமடம் — கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்

98. நம் நாட்டின் மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் பற்றிய தகவல்கள்:

(அ) லக்சபானா, விமல சுரேந்திரா, பொல்பிற்றியா, உக்குவெல, போவரென, இன்கினியகல ஆகும்.

(ஆ) மேலும் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மின்நிலையங்கள்: விக்ரோரியா, கொத்மலை, கன்யன் ஆகும்.

(இ) அடுத்துப் புதிதாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையங்கள்: றான்டெனிகல, சமனலவேவ, குகுல, மதுறு ஓயா ஆகும்.

100. பின்வருவன எங்குள?

(அ) தாழ்ந்தபிரதேச தேயிலைச் செய்கை பற்றிய ஆராய்ச்சி நிலையம்: கல்கம்பொல.

(ஆ) சர்வதேச சிறுகவரை: (டம்பல) ஆராய்ச்சி நிலையம், கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

**கல்வி வெள்ளை அறிக்கை பற்றியன :**

1. இவ்வறிக்கையின்படி கல்விமுறை பின்வரும் கட்டங்களைக் கொண்டதாய் அமையும்.

(அ) ஐந்தாண்டு ஆரம்பப் படிப்பு (1-5)

(ஆ) மூன்றாண்டு கனிஷ்ட இடைநிலை (6-8)

(இ) மூன்றாண்டு சிரேஷ்ட இடைநிலை (9-11)

(ஈ) இரண்டாண்டு பல்கலைக்கழக புதுமுக வகுப்பு (12-13)

2. அறிக்கையின்படி இன்று சுமார் 9500 பாடசாலைகள் உள.

3. கொத்தணி முறைப்படி ஓர் கல்வி வட்டாரத்தில் பத்திற்குக் குறையாத பாடசாலைகள் ஒன்றாக இணையும். இதில் சராசரி 3000 மாணவர்கள் அடங்குவர். இப் பாடசாலைகளுக்கு ஒரு சிரேஷ்ட பாட சாலை மூலாதாரமாக அமையும். இப் பாடசாலையின் அதிபரே கொத் தணிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அவற்றிற்குரிய வேலைத்திட்டங்கள் அமைத்தல், வழிகாட்டல் ஆகிய வற்றிற்குப் பொறுப்பாக இருப்பர்.

4. கொத்தணியின் நோக்கம்: ஆசிரியர் பற்றாக்குறை, கல்வி வசதியின்மை, ஆய்வுகூட நூலக வசதிகள் இல்லாக்குறையை நீக்கி, பரந்த அடிப்படையில் கல்வி அபிவிருத்திக்கு உழைத்தல். இம்முறை மாணவர் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடுதலை நிறுத்தி கல்வி பெறுவதில் நல்ல சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் அளிக்கும்.

5. புதிய கல்வி அமைப்பை முகாமை செய்வதற்கென ஏற்படுத் தப்படும் நிறுவனங்கள் :

(அ) மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழு.

(ஆ) தொழிற் கல்விச் சபை.

(இ) விவசாயக் கல்வி ஆணைக்குழு.

(ஈ) தேசிய கல்வி ஆணைக்குழு.

(உ) கல்வி மதிப்புச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

மருத்துவம் உடல்நலம் ஆகிய துறைகளில் நிகழ்ந்த சாதனைகளும் அவற்றை ஈட்டியோரும் :

1. (X) ஊடுருவிக்கதிர் — றொன்ற் ஜென் (1895)
2. குருதிச் சுற்றோட்டம் — வில்லியம் கார்வே
3. நோயாளிக்கு குருதி ஏற்றும் முறை — கார்ள்லான்ட்ஸ் ரெயினர்
4. இதயமாற்று சத்திர சிகிச்சை முறை — கலாநிதி கிறிஷ்டி பேர்னாட்
5. போலியோ நோய்க்கு (சிறுபிள்ளைவாதம்) எதிரானபால் — ஜோனர்ஸ் ச. ஷோக்
6. நவீன சத்திர சிகிச்சை முறை — லிஸ்டர் பிரபு
7. பற்றீரியாவைக் (Bacteria) கண்டுபிடித்தவர்—வியூவென் ஹொக்
8. கொலரா நோய்க்கிருமி – றொபேட் ஹொக்
9. மலேரியா நோய்க்கிருமி — றொனால்ட் றோஸ்
10. நெருப்புக் காய்ச்சல் கிருமி – இபேர்த்
11. ஹோமியோபதி வைத்தியமுறை — சாம்யுவேல் க. நேமான்
12. பரம்பரை விதி — ஜோகான் மென்டல் (Heredity)
13. இன்சுலின் — எவ். ஜி. பான்டிங்
14. பென்சுலின் — சேர். அலெக்சாண்டர் பிளெமிங்
15. ஸ்ரெப்டோமைசின் — எஸ். ஏ. வாக்ஸ்மென்
16. சல்fபா மருந்து வகைகள் — ஜி. டொமார்க்
17. றேடியம் — கியூரி அம்மையார்
18. ஜீவசத்துக்கள் — ஆர். சி. fபங்
19. இரும்புச் சுவாசப்பை — கலாநிதி பிலிப் திங்கர்
20. எல். எஸ். டி. (L. S. D.) யைக் கண்டுபிடித்தவர்-ஹொfப்மன்
21. மயக்க மருந்து — சேர். ஜேம்ஸ் யங் சிம்சன்
22. அம்மை நோய்த்தடைப்பால் — எட்வேட் ஜெனர்
23. விசர்நாய்கடி மருந்து — லூயி பாஸ்ரர்
24. கண்ணிற்குப் போடும் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர் — றோஜர் பேக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

**நம் நாட்டின் இன்றைய அரசியல் அமைப்பு (யாப்பு) பற்றிய பிரதான குறிப்புகள் :**

1. (அ) புதிய அரசியல் அமைப்பு ஆக்கப்பட்ட ஆண்டு : 1978

(ஆ) ஜனதிபதி நாட்டினதும், பாராளுமன்றத்தினதும் மந்திரி சபையினதும், பாதுகாப்புப் படைகளினதும் தலைவராவர். அமைச்சர் சபையில் ஒரு உறுப்பினரு மாவர்.

(இ) இவர் மக்களாலேயே தெரிவுசெய்யப்படுவார்.

(ஈ) இவரின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும்.

(உ) ஒருவர் இரு தடவைகக்கு மேல் ஜனாதிபதிப் பதவியை வகிக்க முடியாது.

(ஊ) ஜனாதிபதியின் தெரிவு அப்பதவியை வகிப்பவரின் கால எல்லை முடிவடைய இரு மாதங்கள் இருக்கும் பொழுது நடாத்தப்படல் வேண்டும்.

(எ) ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவரின் ஆறாண்டு கால எல்லை அவர் தெரிவு செய்யப்பட்ட தினத்தை அடுத்து வரும் பெப்ருவரி (மாசி) மாதம் 4-ம் திகதி யிலிருந்து ஆரம்பமாகும்.

(ஏ) சந்தர்ப்பங்கள் ஏற்படும் வேளைகளில் ஜனாதிபதிக்குப் பதிலாகக் கடமை புரியும் பொறுப்பு பிரதமரைச் சார்ந்ததாகும்.

(ஐ) எக்காரணம் பற்றியாவது ஜனாதிபதியின் பதில் கடமைகளைப் பிரதமராலும் ஆற்ற முடியாதிருப்பின், சபாநாயகரே ஜனாதிபதியின் கடமைகளை ஆற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) ஜனாதிபதிப் பதவி அப் பதவியை வகிப்பவரின் கால எல்லை முடியுமுன் காலியாகவரின், பாராளுமன்றம் தம் உறுப்பினர் ஒருவரை அப்பதவிக்குத் தெரிவு செய்யும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் அப் பதவிக்குரிய எஞ்சிய காலப் பகுதிக்கு மாத்திரமே பணியாற்றும் உரித்துடையவராவர்.

2. புதிய அரசியல் அமைப்பின்படி நடாத்தப்படும் தேர்தல் ''விகித சமப் பிரதிநிதித்துவ'' முறையிலேயே நடாத்தப்படும்.

3. அடுத்த பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் தொகை : 196

(அ) மாகாண மாவட்ட ரீதியில் : 36

(ஆ) தேர்தல் மாவட்ட ரீதியில் : 160

4. ''ஒப்பங் கோடல்'' (Referendum) என்பதன் பொருள்: இது சிறந்த ஜனநாயக ஆயுதம்; குறிக்கப்பட்ட விடயமொன்று சர்ச்சைக் குரியதாக இருப்பின் அதுபற்றி பாராளுமன்றம் சட்ட நடவடிக்கை எடுக்குமுன், நாட்டு மக்களின் விருப்பு, வெறுப்பு பற்றி அறிய நடத்தப்படும் ஓர் தேர்தலேயாகும்.

5. அரசியல் யாப்பில் 1983ல் புகுத்தப்பட்ட ''ஆறாவது திருத்தமூலம்'' படி சகல சட்ட உறுப்பினர்களும் அரச ஊழியர்களும் நாட்டின் ஐக்கியம் இறைமைக்கு விசுவாசமுள்ளவரென உறுதிப்பிரமாணம் செய்யவேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது.

**கனிப் பொருட்கள்**

**உற்பத்தியில்முதலிடம் வகிக்கும் நாடுகள் :**

| | |
|---|---|
| இரும்பு | — சோவியத் ருஷியா |
| நாகம் | — பெல்ஜியம் |
| ஈயம் | — ஐக்கிய அமெரிக்கா |
| வெள்ளியம் | — மலேஷியா |
| பொன் | — தென்னாபிரிக்கா |
| செம்பு | — ஐக்கிய அமெரிக்கா |
| நிலக்கரி | — சோவியத் ருஷியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

**பிரித்தானிய பொதுநலவாய அமைப்புப் பற்றிய சில பிரதான குறிப்புக்கள்.**

1. பிரித்தானிய பொதுநல அமைப்பில் ஓர் நாடு அங்கம் வகிப்ப தற்கு இருக்கவேண்டிய தகைமை; பிரித்தானிய நாட்டின் ஆட்சியி லிருந்து சுதந்திரம் பெற்ற எந்த ஒரு நாடும் அங்கத்துவ உரிமையைப் பெறமுடியும்.

2. இவ்வுரிமையைப் பெறவிரும்பாது சென்ற நாடு; பர்மா.

3. இவ்வமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட நாடும், அதற்காகிய காரணமும்: தென் ஆபிரிக்கா, இனவாத நிறுத்துவேச கொள்கைகளை அது கடைப்பிடிப்பதால்.

4. இவ்வமைப்பிலிருந்து தானாகவே வெளியேறிய நாடு: பாகிஸ்தான். காரணம், தம் நாட்டின் பகுதியாகிய கிழக்குப் பாகிஸ் தான் பிரிந்து சென்று "பங்களாதேஷ்" எனத் தனித்துவம் பெற்ற தும் பொதுநலவாய அமைப்பில் உறுப்புரிமையைப் பெற்றது. பாகிஸ்தான் இதனை ஏற்றுக்கொள்ளாது வெளியேறியது.

5. பிரித்தானிய பொதுநலவாயத்தின் தலைவர் யார்?
ஆங்கில நாட்டின் அரசர்; எனவே இன்றைய தலைவர்; மாட்சிமை மிக்க இரண்டாவது எலிசபேத் மகாராணியார்.

6. பிரித்தானிய பொதுநலவாய அமைப்பில் இன்று அங்கம் வகிக்கும் நாடுகளின் தொகை: 50.

7. பிரித்தானிய பொதுநலவாயத்தின் காரியாலயம் இருக்கும் இடம்; லண்டன். செயலாளர் நாயகத்தின் பெயர்: டேவிட் ரொன்கின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## நீர் அறிந்திருக்க வேண்டிய பலதரப்பட்ட விடயங்கள்:

1. இலங்கையில் "சிகிரியா ஓவியம்", அதேபோல் இந்தியாவில் : அஜந்தா ஓவியம்

2. " பப்பிரஸ் " என்பது: நைல் நதியில் வளரும் ஒரு வகைப் புல். புராதன எகிப்தியர் இப் புல்லிலேயே எழுதினர். " பேபபர் " என்ற பதம் "பப்பிரஸ்" ல் இருந்து மருவியதாகும்.

3. ஹொலிவூட் நகரம் அமைந்துள்ள இடம்; அதன் புகழ்: கலிபோனியா, அமெரிக்க சினிமாப் படங்கள் தயாரித்தல்

4. எகிப்தின் மாதா என அழைப்பது : நைல் நதி

5. றொபின்சன் குருசோவோடு தொடர்புள்ள தீவு, அது இருக்கும் சமுத்திரம் : யு ஆன் பெனான்டெஸ், பசுபிக்

6. உலகின் சகல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல் : பைபில்

7. ரோக்கியோவின் பிரதான துறைமுகம்; யோக்கோகாமா

8. இலங்கைக்குத் தென் மேற்கே 400 மைல்களுக்கு அப்பாலுள்ள 17 சிறு தீவுகளின் பெயர்: மாலை தீவுகள்

9. இங்கிலாந்திலுள்ள சான்ட்கேஸ்ற் கல்லூரியில் மேற்கொள்ளக்கூடிய படிப்பு அல்லது பெறக்கூடிய பயிற்சி: இராணுவப் பயிற்சி

10. பிரித்தானிய பாராளுமன்றத்தை முதல் முதல் கூட்டியவர்; சைமன் டி மொன்ற் போட்

11. " பிரதிநித்துவம் இல்லையேல் வரியிறுக்க மாட்டோம் " என்ற கூச்சல் எந் நாட்டின் சுதந்திரப் போருக்குக் காரணமாக அமைந்தது ? அமெரிக்க சுதந்திரப் போர்.

12. கிரிக்கெற் பந்தடிக்கும் மட்டை (bat) செய்யப்படும் மரம் : விலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சமுத்திரத்திலுள்ள கப்பலின் கொடி தலைகீழாகப் பறக்க விட்டிருந்தால் அதன் நோக்கம்; ஆபத்தில் சிக்குண்டு உதவியை அவசியம் நாடுகின்றது.

14. இங்கிலாந்தில் ''ஒக்ஸ்போட்'', ''கேம்பிரிட்ஜ்'' போன்று அமெரிக்காவில் புகழ்பெற்ற இரு சர்வகலாசாலைகள்: யேல் சர்வகலாசாலை, காவாட் சர்வகலாசாலை

15. மனித சரீரத்திலுள்ள எலும்புகள்: 206

16. அமெரிக்க நாட்டின் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு; யூலை மாதம் 4ம் திகதி 1776ம் ஆண்டு

17. ''மோர்ஸ் கோட்'' உபயோகிக்கப்படுவது: தந்திச் செய்தி அனுப்புவதற்கு

18. கியூபா தேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் இரு பொருட்களின் பெயர்: சீனி, கவானா சுருட்டு

19. கனடாவில் புதிய தேசியக் கொடியின் மத்தியில் காணப்படும் சின்னம்: மாப்பில் இலை — சிவப்பு நிறம்

20. தேசியக் கொடியின் மத்தியில் அசோக சக்கரம் பொறிக்கப்பட்டுள்ள நாடு: இந்தியா

21. '' டலை லாமா '' என அழைக்கப்படுவர்: தீபேத் நாட்டின் பிரதம குருவும் நாட்டின் ஆத்மீக, அரசதுறைத் தலைவரும், (சீனர் தீபெத்தை ஆக்கிரமித்த நாளிலிருந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்த இவர் அண்மையில் அமெரிக்காவில் காலமானார்.)

22. '' பொஸ்ரன் தேநீர் விருந்து '' எந் நாட்டின் சரித்திரத்துடன் தொடர்புடையது? அமெரிக்கா

23. '' சீனாவின் சோகம் '' என அழைக்கப்படுவது: காலத்திற்குக் காலம் பெருக்கெடுக்கும் கவாங்கோ நதியை

24. பிரித்தானிய நாட்டின் முதலாவது பிரதமர்: றோபேற் வால்போல்

25. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை, இவற்றுள் மிகப் பெரிய மாகாணம்: 50, ரெக்சாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பைபிளின் முதற்பாகமாகிய பழைய ஏற்பாட்டில் கூறப் பட்டிருக்கும் சரித்திரத்துக்குச் சொந்தமானவர்கள்: யூதர்கள்

27. " எஸ்கிமோவர் " " செவ்விந்தியர் " வசிக்கும் இல்லங் கள் எவ்வாறு அழைக்கப்படும்? இக்லூ, விக்வாம்

28. கங்காரு மிருகங்கள் காணப்படும் நாடு: அவுஸ்திரேலியா

29. கம்போடியாவில் அழிந்து கிடக்கும் புராதன நகரம்: அங்கோர்

30. அவுஸ்திரேலிய நாட்டிலுள்ளதும், பறக்க முடியாததுமான பறவையின் பெயர்: எமு

31. " போலியோ மைலற்றிஸ் " எந்நோயைக் குறிக்கும்: சிறுபிள்ளை வாத நோயை

32. பின்வரும் தேசங்களின் பாராளுமன்றங்களை அவ்வத் தேசங்களில் எவ்வாறு அழைப்பர்?

| | |
|---|---|
| அமெரிக்கா — கொங்கிரஸ் | ஈரான் — மஜ்லிஸ் |
| ஐஸ்லாந்து — அல்திங் | மலேசியா — மஜ்லிஸ் |
| டென்மார்க் — றிக்ஸ்டாக் | ஸ்ரேல் — நெஸ்செற் |
| ஹொலண்ட் — ஸ்ரெற்ஸ் ஜெனரல் | சுவீடன் — றிக்ஸ்டாக் |
| ஜேர்மனி — றெயிஷ்ஸ்ராக் | டென்மார்க் — போக்கெற்றிங் |
| யாப்பான் — டயற் | நேபாளம் —ராஸ்திரிய பஞ்சாயற் |
| அயர்லாந்து — டெயில் | நோர்வே — ஸ்ரோற்றிங் |

33. கண்கள் இரண்டும் மூடப்பட்டுக் கையில் தராசுடன் காணப் படும் பெண்ணின் உருவம் எதனைக் குறிக்கும்: நீதி

34. ருஷியாவின் புதினச் செய்தி ஸ்தாபனத்தின் பெயர்: ராஸ்

35. ருஷிய அரசாங்கத்தின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கும் அந்நாட்டின் இரு புதினப் பத்திரிகைகளின் பெயர்: பிராவாடா, ஸ்வெஸ்ரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. எந்நாட்டின் தபால் முத்திரைகளில் அந்நாட்டின் பெயர் அச்சிடப்படுவதில்லை? இங்கிலாந்து

37. பின்வரும் இடங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்ற எப் பெரியார்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையன?

(அ) காயா — புத்தபகவான்

(ஆ) வாற்ரலூ — பெல்ஜியத்திலுள்ள இடம், இங்கு ஆங்கிலேயர் நெப்போலியனைத் தோற்கடித்துக் கைதியாக்கினர்.

(இ) இராச்காற் — இந்தியத் தலைவர்கள் தகனம் செய்யப்படும் இடம். காந்திமகானின் ஞாபகச்சிலை ஒன்றும் இங்குள்ளது.

(ஈ) சேவாகிராமம் — இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் வார்தா என்னுமிடத்திலுள்ள ஓர் கிராமம். காந்தியின் இலட்சியத்தினை இக் கிராமம் பிரதிபலிக்கிறது.

(உ) மெக்கா — இஸ்லாமியருக்குப் புனிதமான யாத்திரை ஸ்தலம். முகமது நபியின் பிறப்பிடம். அரேபியாவிலுள்ளது.

(ஊ) கோசிக்கா — ஓர் தீவு. நெப்போலியன் பிறந்த இடம்.

(எ) எல்பா — முதலில் நெப்போலியன் நாடுகடத்தப்பட்ட தீவு.

(ஏ) தக்ஷினேஸ்வரம் — இராமகிருஷ்ண பரமஹம்சருடன் தொடர்புள்ள தூய இடம். கல்கத்தாவில் உள்ளது.

38. பின்வருவன இலங்கை வரலாற்றுடன் எவ்வகையில் தொடர்புடையன?

(அ) சாஞ்சி — பிரபல பௌத்த ஸ்தலம்

(ஆ) அஜந்தா — அஜந்தா ஓவியம், (சிகிரியா ஓவியம் போன்றன)

39. பின்வரும் பெயர்கள் எந்நாடுகளை அல்லது இடங்களைக் குறிக்கும்?

(அ) தடுக்கப்பட்ட நகரம் — லாசா

(ஆ) ஏழுமலைகள் கூடிய நகரம் — உரோமாபுரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) இருண்ட கண்டம் — ஆபிரிக்கா

(ஈ) உலகின் கூரை — மத்திய ஆசியாவிலுள்ள பமீர்

(உ) பரிசுத்த பூமி — பாலஸ்தீனம்

(ஊ) எகிப்தின் கொடை — நைல்நதி

(எ) ஈடணின் தோட்டம் — இலங்கை

40. (அ) முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் புனிதமான நகரம்: ஜெருசலேம்

(ஆ) கிறிஸ்துநாதர் அவதரித்த இடம்: பெத்லகேம்

41. யப்பானிய நடனச் சிறுமிகளை எவ்வாறு அழைப்பர்? கெய்ஷா சிறுமிகளென

42. அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகமெனக் கருதப்படுவது: கங்காரு

43. 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி உலக சரித்திரத்தில் எவ்வகையில் முக்கியம் வாய்ந்ததாகும்? 6-8-1945ல் தான் முதன் முதல் அணுக்குண்டு யப்பானிலுள்ள கிரோசிமா தீவில் வீசப்பட்டு 92, 040 பேர் மாண்டனர்.

44. இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கி முடிவடைந்த காலம்: 1-9-1939ல் தொடங்கி 9-5-1945ல் முடிவடைந்தது.

45. "இறுதி விருந்தை" யார் எவர்களுடன் உண்டார்? யேசுக்கிறிஸ்துநாதர் தம் சீடருடன்.

46. "மல்தூசியன் கொள்கை" எதனுடன் தொடர்புடையது? சனத்தொகைப் பெருக்கத்துடன்.

47. அகில உலக தொழிலாளர்கள் கொண்டாடும் தினம், அத்தினம் வரும் மாதம்: மே தினம், மேமாதம் முதலாம் திகதி.

48. எவ்வகையான தாமதங்களை, தயக்கங்களை, தடைகளைச் "சிவப்பு நாடா" எனக் குறிப்பிடுவர்.

அரசாங்க இலாகாக்களில் ஏற்படும் உத்தியோக சம்பிரதாய சுணக்கங்களை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. ''சயமீஸ் இரணைகள்'' எதனை அல்லது எத்தன்மையைக் குறிக்கும்.

பிறக்கும் பொழுதே தசையோடு தசை ஒட்டிக்கொண்டு பிறக்கும் இரணைப் பிள்ளைகளை.

50. இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்கள் தமது வருடங்களை எச் சம்பவங்களிலிருந்து கணித்துள்ளனர் — அவர்களின் முதலாவது வருடத்தின் பெயர் :

முகம்மது நபியடிகள் தம் பகைவரின் பிடியிலிருந்து உயிர் தப்பிக் கொண்டு மெக்காவை விட்டு மெடினாவுக்கு ஒடிய சம்பவத்தைக் கொண்டு; இச் சம்பவத்தை 'ஹெஜிரா'' என அழைப்பர். அவர்களின் முதல் வருடத்தின் பெயரும் அதுவே.

51. ஆகாயவிமானம் கட்டுவதில் பெருமளவு உபயோகிக்கும் உலோகம் : அலுமினியம்.

52. 7075 தீவுகள் கூட்டமாக அமைந்த நாடு : பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டங்கள்.

53. ஓர் உலக செய்தி ஸ்தாபனத்தின் பெயர் : ரொயிட்டர்.

54. ஐரோப்பாவிலுள்ள மிகச் சிறிய தேசம்; மொனாக்கோ.

55 பின்வரும் நாடுகளில் உள்ள புல்வெளிகளை எவ்வாறு அழைப்பர் :

(அ) ஆபிரிக்கா — வெல்ற்
(ஆ) தென் அமெரிக்கா — பம்பாஸ்
(இ) வட அமெரிக்கா — பிறேயறிஸ்
(ஈ) அவுஸ்திரேலியா — டவுன்ஸ்
(உ) ஆசியா — ஸ்ரெப்பிஸ்

56. P. L. 480 யாது ?

அமெரிக்காவினால் உணவு போன்ற உதவிகளை பின் தங்கிய நாடுகளுக்கு நல்கும் திட்டம்.

57. கொழும்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :

1950. நோக்கம் : தென்கிழக்காசிய நாடுகளுக்கு கல்வி, பொருளாதார தொழில் நுட்ப உதவிகள் வழங்குவதற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்து சமுத்திரத்தில் உள்ள ஒரு நாட்டில் தென் ஆபிரிக்க ஆதரவுடன் கூலிப்படை ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட சதி முறியடிக்கப்பட்டுள்ளது.

அந்நாடு: செசில்ஸ், 92 சிறு தீவுகளைக் கொண்டது. இவற்றினுள் ''மகே'' என்பதே பெரிய தீவு. அதன் பிரதமர்: அல்பேன்றீன். அதன் தலைநகரம்: விக்றோரியா.

59. இந்தியாவில் தமக்கென தனிநாடு கோரும் இனத்தவர் சீக்கியர்; அவர்கள் அமைக்க இருக்கும் தனி நாட்டின் பெயர்: ஹாலிஸ்ரான்,

60. உகண்டா நாட்டின் சர்வாதிகாரியாகவிருந்து மனித நாகரீகத்துக்கே அவமானமெனக் கருதப்பட்ட பல கொடூரங்களைச் செய்து முடிவில் நாட்டிலிருந்து தப்பி ஓடியவர்: இடி அமீன். இன்று சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

61. ஐ. நா. பல்கலைக் கழகம் எங்குளது? யப்பானிய ரோக்கியோ நகரில்.

62. நியூற்றோன் குண்டினைத் தயாரித்த விஞ்ஞானி:

சாமுவேல் கொஹென்.

63. ''செஸ்சயர் இல்லம்'' என அழைக்கப்படுவது:

திக்கற்ற வயோதிபர், அங்கவீனர் ஆகியோருக்குப் புகலிடம், உணவு, உடை வழங்கி, அவர்களை இறக்கும் வரை பராமரிக்கும் நிலையங்கள். உலகின் பல நாடுகளில் இவ்வில்லங்கள் உண்டு. இலங்கையிலும், சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் இதுபோன்ற இல்லம் இயங்குகிறது இதனை ஆரம்பித்து சர்வதேச புகழ் பெறச் செய்தவர் மீற்றர் செஸ்ஷயர் எனும் ஆங்கிலேயர். பிரித்தானிய அரச விமானப் படையில் இரண்டாவது உலக யுதத்தின்போது விமானியாக இருந்தவர்.

64. நம் நாடு உட்பட பல்வேறு நாடுகளின் பண நோட்டுக்களை அச்சிடுவதில் உலகப் புகழ்பெற்ற நிறுவனம்: பிராட்பெரி வில்கின்சன்.

65. கிறிஸ்துநாதர் எவ்வினத்தைச் சேர்ந்தவர்? யூதஇனம்.

66. பிரிட்டனின் தொழிற் கட்சியின் தீவிரவாதியென அழைக்கப் படுபவர்: ரோனி பென்.

67. ஜெயவர்த்தனபுரியில் (கோட்டே) கட்டப்பட்ட எமது புதிய பாராளுமன்றத்தின் திறப்புவிழா வைபவம் நடைபெற்ற திகதி:

19 - 2 - 1982

68. எமது சூழல் மாசுற உள்ள காரணிகள் 5:

வளி; நீர்; நிலம்; அணுக் கதிர் வீச்சு; ஓசை ஆகியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69, தென் மேற்கு ஆபிரிக்காவில் கறுப்பர்களுக்கென உரிமை கோரிய ஸ்தாபனம் : தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் மன்றம் (SWAPO). இதன் தலையர் : சாம் நிஜேமா.

70. எண்ணெய் உற்பத்திவள ஒன்றியத்தின் (OPEC) அங்கத்துவ நாடுகளின் தொகை : 13. அதன் தலைமைக் காரியாலயம் : வீயன்னா நகரிலுளது.

71. ஐரோப்பியரும், கத்தோலிக்க பெண் துறவியும், கல்கத்தாவில் ஏழைகள், சேரிப்புற மக்களின் துயர் துடைக்கும் தர்மப்பணியில் சென்ற பல ஆண்டுகளாக உழைத்து வருபவரும், சர்வதேச புகழ் பெற்றவரும் : அன்னை தெரேசா.

72. அகில உலக கண் பார்வையற்றோரின் தினம் என அழைக்கப்படுவது: வெண் பிரம்புத் தினம் (White Cane day)

73. பொதுவுடைமைக் கட்சியின் சின்னம் : சம்மட்டியும் அரிவாளும்.

74. மகாராணியார் 1981ல் நம் நாட்டிற்கு வருகைதந்த பொழுது அவரின் பிரயாணத்திற்காக விசேடமாக ஆக்கப்பட்ட புகையிரதத்தின் பெயர் : சின்டிரெல்லா (Cindrella)

75. சம பகல் இராக் காலங்கள் வரும் திகதிகள் :

மார்ச் 21 ; செப்ரெம்பர் 33, சூரியன் ஆண்டில் இருமுறை புவி மத்திய கோட்டிற்கு உச்சங் கொடுக்கும் காலங்கள்.

76. சர்வதேச திகதிக் கோட்டினை ஒருவர் மேற்கிலிருந்து கடந்து கிழக்கு நோக்கிச் செல்லும்பொழுது செய்யவேண்டியது : ஒரு நாளைக் குறைக்கவேண்டும். அதே போன்று சர்வதேச திகதிக்கோட்டை கிழக்கிலிருந்து கடந்து மேற்கு செல்கையில் ஒரு நாளைக் கூட்டவேண்டும்.

77. வடக்கு நாடுகள் எனக் குறிப்பிடப்படுவன யாவை? அபிவிருத்தி அடைந்த நாடுகள் ; தெற்கு நாடுகள் யாவை?

அபிவிருத்தி அடைந்துவரும் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள்.

76. 2000 கி. பி.யில் உலக சனத்தொகை எவ்வளவாக இருக்குமென நிபுணர்கள் கருதுகின்றனர்? 6000மில்லியன் (650 கோடி)

79. (நவம்பர் 1981ல்) அமரத்துவமடைந்த பிரபல இஸ்லாமிய பெரியாரும், தொழிலதிபரும், இன, மத, மொழி பாகுபாடின்றிப் பல அறப்பணிகளுக்கு வாரி வழங்கிய கொடைவள்ளல் : எஸ். என். மொசாஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. ஆபிரிக்காவில் எண்ணெய் வளம் நிறைய இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிரதேசம்:

மேற்கு ஆபிரிக்கப் பிரதேச நாடுகள்; ஐவறிகோஸ்ற், கமறூன் ஆகியன.

81. ருசிய விண்வெளிக் கேந்திரத்திலிருந்து ஏவப்பட்ட இந்தியாவின் இரண்டாவது புவி ஆய்வு செயற்கைக்கோள்:

பாஸ்கரா — 2. 95 நிமிடங்களுக்கொரு முறை பூமியை வலம் வரும் சக்தியுடையது.

82. (நவம்பர் 1971-ல்) யப்பானிய நாட்டினால் எம் நாட்டின் கீர்த்திமிகு அறுவை வைத்தியர் ஒருவருக்கு அத்தேசத்தின் அதி உன்னத விருது ஒன்று வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அவர் பற்றிய விபரம்:

வைத்திய கலாநிதி பி. ஆர். அந்தனிஸ், கொழும்பு பல்கலைக்கழக வேந்தர்: திறமைமிகு அறுவை வைத்தியர்.

83. இலங்கையில் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் போன்று பம்பாயில் — சான்ராகுரூஸ்; டெல்கியில் — பாலம்; சென்னையில் — மீனம்பாக்கம்; கல்கத்தாவில் — டம்டம்; லண்டனில் — கீத்றோ, நியூயார்க்கில் — கெனடி சர்வதேச விமான நிலையம்; சிங்கப்பூரில்— சாங்கி.

84. நமது நாட்டின் பிரதான நாணயம் ரூபா போன்று:

ருஷியாவினது — றூபிள், அமெரிக்காவினது — டொலர், இங்கிலாந்தினது — ஸ்ரேலிங் பவுண், நைஜீரியாவினது — நயரா, சவூதி அரேபியாவினது — றியால், ஜேர்மனியினது — மார்க், யப்பானினது— யென், இத்தாலியினது — லீரா, பிரான்சினது — பிராங். சிங்கப்பூரினது — டொலர், சுவிற்சிலாந்தினது — பிராங், லிபியாவினது — டினார், டென்மார்க் — குறோணர் (கிறவுன்), பர்மா — கியாற், மாலைதீவு — றுப்பியா.

85. பின்வருவோரின் உத்தியோக வாசஸ்தலங்களின் பெயர் யாது?

பிரித்தானிய பிரதமர் — இல. 10, டவுனிங் வீதி, லண்டன், பிரித்தானிய அரசி — பக்கிங்காம் மாளிகை, லண்டன், அமெரிக்க ஜனாதிபதி — வெள்ளை மாளிகை, உவாஷிங்ரன், இந்திய ஜனாதிபதி — இராஷ்டிரபதி பவான், டெல்கி, இலங்கை ஜனபதிபதி — ஜனாதிபதி மந்திராய, கொழும்பு, இலங்கைப் பிரதமர் — ரெம்பிள் ரீறிஸ், கொழும்பு, சபாநாயகர்—மும்ராஜ் மகால், கொழும்பு, பாராளுமன்ற உறுப்பினர் விடுதி — சிராஸ்வதி, கொழும்பு, பாப்பாண்டவர் — வத்திக்கான், உரோமாபுரி, பிரான்ஸின் ஜனாதிபதி—எலிசி மாளிகை, பாரிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

1. இந்தியர்களுக்காக தென் ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி நடாத்திய உரிமைப் போராட்டத்தின்போது அவரால் பிரசுரிக்கப் செய்தித்தாளின் பெயர் : இந்தியனின் கருத்து (Indian Opinion)

2. ஒரு சாதாரண மனிதனின் உடலிலுள்ள இரத்த அளவு: 4ல் இருந்து 5 லீற்றர்.

3. 'மூன்றாம் உலக நாடுகள்' என குறிக்கப்படுபவை ; வளர்முக அல்லது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள்.

4. மனித உரிமைச் சபை (U. N. Human Rights Commission) அமைந்துள்ள இடம் : ஜெனிவா-

5. உலக சனத்தொகைக் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பாகவுள்ள சபை : UNFPA.

6. 'கபில வஸ்து, எனும் இடத்துடன் தொடர்புடையவர் : புத்தர் பெருமான்.

7. மூன்று சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் உள்ள நாடு: தென் ஆபிரிக்கா — அதில் ஒரு சபை தனியாக ஓரின மக்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

8. இந்திய பாராளுமன்ற கீழ் சபை உறுப்பினர் தொகை : 545

9. இந்திய பாராளுமன்ற மேற்சபை (ராஜ்ய சபை) யின் உறுப்பினர் எண்ணிக்கை : 250.

10. ''என்னைத் தீண்டாதே; நான் புனிதமானவன்', எனக் கூறும் தனது மதத்தைக் கண்டித்த உத்தமன் : சுவாமி விவேகானந்தர்.

11. காங்கிரஸ் (Congress) என அழைக்கப்படும் பாராளுமன்றம் அமைந்த நாடு : ஐக்கிய அமெரிக்கா (U. S. A.). அதில் உள்ள சபைகள் இரண்டு. அவற்றின் பெயர்கள் : பிரதிநிதிகள் சபை ; செனெற் சபை.

12. Amnesty International (A. I.) சர்வதேச மன்னிப்புச்சபையின் தலைமைக் காரியாலயம் உள்ள இடம் : லண்டன்.

13. பவனம் இல்லாதிருப்பின் வானின் நிறம் : கறுப்பாக இருக்கும்.

14. புத்தர் பிரானின் இறப்புடன் தொடர்புடைய இடம் : குசி நகர

15. பூமியில் 60 கிலோகிராம் எடையுள்ள மனிதன் சந்திரத் தரையில் : 10 கிலோகிராம் எடையுள்ளளராக இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. 'தண்டி யாத்திரை' யுடன் தொடர்புடைய மகான் : காந்திஜீ — ஆண்டு : 1930.

17. ஐ. நா. தினம் அனுஷ்டிக்கப்படும் நாள் : 24 அக்டோபர்.

19. 'சுவாப்பே' (SWAPO) எனும் அமைப்புடன் தொடர்புடைய நாடு : நமீபியா.

19. கொன்றிரா புரட்சியாளருடன் தொடர்புடைய நாடு : நிகராகுவா.

20. அகதிகளுடன் தொடர்புடைய உலக ஸ்தாபனம்; UNHCR.

21. சங்ககால இலக்கியத்துடன் தொடர்புடைய மொழி : தமிழ்.

22. சுவெஸ் கால்வாயால் இணைக்கப்படும் இரு கடல்கள் : செங்கடல், மத்தித்தரைக் கடல்.

23. 'கிலாஸ்நொஸ்ற்' எதனைக் குறிக்கும்? பேச்சு, எழுத்து சுதந்திரம். ருஷிய நாட்டின் அதிபர் கோப்பச்சேவால் 70 ஆண்டுகளுக்குப் பின்னர் ருஷிய மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமை.

24. ருஷிய நாட்டின் அண்மைக்கால ''மறுசீரமைப்பு'' இயக்கத்தைக் குறிக்கும் பதம் : பிரெஸ்ரொய்கா (Prestroika).

25. சந்திரத் தரையில் முதல் இறங்கிய மனிதன் : நீல் ஆம்ஸ்ரிரோங்.

26. 'பாசிச' அரசியல் கொள்கை உதயமான நாடு : இத்தாலி, அதேபோன்று 'நாசிசம்' தோன்றிய நாடு : ஜேர்மனி.

27. மிகப் புராதனமான வேதம் : 'றிக்' வேதம்.

28. F16 என குறிப்பிடப்படுவது : அமெரிக்காவினால் தயாரிக்கப்படும் அதிநவீன விமானம்.

29. கதாக், கதாகளி, குஞ்சிபிடி, கார்பா ஆகிய பதங்களால் குறிக்கப்படுவன : இந்திய நடனங்கள்.

30. சாஞ்சி ஸ்தாபனத்துடன் தொடர்புடைய மதம் : பௌத்தம், இந்திய மத்திய பிரதேசத்திலுள்ளது.

31. ''கொள்வனவு செய்பவரின் சந்தை'' (A buyer's market) என்ற கூற்றின் கருத்து : 'கேள்வியிலும் பார்க்க நிரம்பல்' கூடுதலாக உள்ள நிலை.

32. 'மிராஜ்' (MIRAGE) என அழைக்கப்படுவது : பிரான்ஸ் தேசத்தால் உற்பத்தி செய்யப்படும் அதிவேக யுத்த விமானம்.

33. 'ரெம்பில்ரன் பரிசு' (Templeton Prize) எப்பணியில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கு வழங்கப்படும்? சமய, ஆத்மீக துறை.

34. வட அயர்லாந்தின் மறுபெயர் : அல்ஸ்ரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. நிகராகுவா நாட்டில் அமெரிக்காவின் ஆதரவுடன் செயற் படும் பயங்கரவாத குழுவினரின் பெயர்: கொன்றா (Contra).

36. பிரித்தானியாவிலுள்ள பல்கலைக்கழக மொன்றில் வேந்தராக நியமனம் பெற்றுள்ள முதல் கறுப்பு இனத்தவர்: சேர் ஸ்ரீடத் றம்பால். பல்கலைக்கழகத்தின் பெயர்: வாரிக் பல்கலைக்கழகம் (Warwick University). இவர் முன்னர் வகித்த பதவி: பொதுநலவாய அமைப் பின் முன்னைநாள் செயலாளர்–நாயகம்.

37. 'சாத்தானின் கவிதை' என்ற நூலை எழுதிப் பிரசுரித்து, இஸ்லாமிய மதத்தினரின் சீற்றத்தைப் பெற்று அவர்களின் கொலைப் பயமுறுத்தலுக்கு ஆளாகியுள்ள எழுத்தாளன்: சல்மான் றஸ்டீ. இந் நூலின் மூலம் நபிநாயகத்தை அவமதித்துள்ளாரென ஈரானிய மதத் தலைவர்களும் அரசும் அவருக்குப் பகிரங்கமாகவே மரணதண்டனை விதித்தமையால், அவர் ஓர் ஆண்டிற்கு மேலாகத் தலைமறைவாகவே மேலைத் தேசங்களில் வாழ்ந்து வருகின்றார்.

38. பின்வருவோரால் ஆக்கப்பட்ட, சிறந்த நூல்களில் இரண்டு:

| | | |
|---|---|---|
| பேற்றண்ட் றசல் பிரபு | : | நான் ஏன் ஒரு கிறிஸ்தவ னல்ல; சமூகத்தில் விஞ்ஞா னத்தின் தாக்கம் |
| கலாநிதி எஸ். இராதாகிருஷ்ணன் | : | வாழ்க்கை பற்றி ஓர் இலட்சியவாதியின் கருத்து; வாழ்க்கை பற்றி ஓர் இந்து சமயத்தவனின் கருத்து. |
| ஸ்ரீ ஜவஹர்லால் நேரு | : | இந்தியாவைக் கண்டமை; உலக வரலாறு பற்றிய ஒரு பார்வை. |
| ஜோர்ஜ் பேனாட் ஷோ | : | பிக் மலியன்; செயின்ற்ஜோன். |
| ரொல்ஸ் ரோய் | : | யுத்தமும் சமாதானமும்; அனா கரீனா |
| சாள்ஸ் டிக்கின்ஸ் | : | டேவிட் கொப்பர் பீட்ல்; ஒலிவர் ருவிஸ்ற் |
| மக்சிம் கோர்க்கி | : | தாய்; எனது; பல்கலைக் கழகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. பின்வரும் உலகப் பிரபல்யமடைந்த நூல்களைஎழுதியோர் :

| | | |
|---|---|---|
| பிராசின்யப் புரட்சி | : | தோமஸ் கார்லை |
| கன்றபெறிகதைகள் | : | ஜியோபிறே சோசர் |
| றொபின்சன் குரூசோ | : | டானியல் டீபோ |
| டாஸ் கப்பிற்றல் | : | கார்ள் மார்க்ஸ் |
| அர்த்த சாஸ்திரம் | : | கௌடிலிய |
| சற்ரலி அம்மையாரின் காதலன் | : | டி. எச்- லோறன்ஸ் |
| றூபியத் | : | ஓமார் காயம் |
| சமூக உடன்படிக்கை | : | றூசோ |
| கலிவரின் பயணங்கள் | : | யொநாதன் சுவிப்ற் |
| குடியரசு | : | பிலாற்றோ |
| கீதாஞ்சலி | . | இரவீந்திரநாத் தாகூர் |
| பஞ்சதந்திரம் | : | விஷ்ணுசர்மா |

40. சிறுவர்களுக்கென ' மிக்கி மவுஸ் ' ' டொனால்ட் டக் ' என்ற பாத்திரங்களைச் சிருஷ்டித்தும், அவர்களுக்காகிய கேலிச் சித்திரங்கள், நந்தவனம், ''டிஸ்னி லாண்ட்'' என அழைக்கப்படும் பூங்கா ஆகியனவை கலிபோனியாவில் நிறுவியவர்: வால்ரர் எலியாஸ் டிஸ்னி.

41. அமெரிக்காவில் அரசியல் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதிகளின் பெயர்கள் :

அ. ஆபிரகாம் லிங்கன்
ஆ. ஜேம்ஸ் எ. கார்பீல்ட்
இ. வில்லியம் மக்கின்லி
ஈ. ஜோன் எப். கென்னடி

42. பங்களாதேசத்தின் தந்தையென அழைப்பட்டவர் : முஜிபர் ரகுமான். அவரை மக்கள் ''தேசபந்'' என அழைத்தனர். பின்னர் படுகொலை செய்யப்பட்டார்.

43 ''குருதேவ்'' என அழைக்கப்பட்டவர் : கவி ரபீந்திரநாத் தாகூர் ; அவரே இந்திய தேசிச கீதத்தையும் ஆக்கிய சிறப்புக்குரியவர்.

44. பின்வருவோர் எந்நாட்டின் அரசியல் விழிப்புடனும் எழுச்சியுடனும் தொடர்புடையர் ?

| | | |
|---|---|---|
| ஹோ ஷீ மின் | — | வியற்நாம் |
| பற்றிஸ் லுமும்பா | — | கொங்கோ |
| மார்ஷல் ரிற்றோ | — | யூகோசிலேவியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| லெக் வலேசா | — | போலாந்து |
| வொல்ரயர் | — | பிரான்ஸ் |
| ஜெனரல் பிராங்கோ | — | ஸ்பெயின் |
| டீ கோல் | — | பிரான்ஸ் |
| பெஞ்சமின் டிஸ்றேலி | — | இங்கிலாந்து |
| ஏமன் டீ வலேரா | — | அயர்லாந்துக் குடியரசு |
| தலை லாமா | — | தீபெத்து |
| மா ஷே துங் | — | நவசீனம் |
| கரிபால் டி | — | இத்தாலி |
| கெமால் அற்ராரேக் | — | துருக்கி |
| அயொத்தலா கொமெனி | — | ஈரான் |
| கடாபி | — | லிபியா |
| சதாம் குசேயின் | — | ஈராக் |

45. பறக்க இயலாத பறவைகள்: கிவி, எமு, தீக்கோழி, பென் குவின்.

46. மனிதனுக்கு மிக்க பயனுள்ள பூச்சிவகைகள் இரண்டு: தேன் ஈ, பட்டுப்பூச்சி.

47. தென் ஆபிரிக்காவின் கறுப்பின மக்களின் உரிமை, சுதந்திரம் ஆகியவற்றிற்காக உழைக்கும் இருவர்: மதகுரு டெஸ்மன்ட் ரூற்ரு, நெல்சன் மண்டலா.

48. பிரித்தானிய பாராளுமன்ற பொதுமக்கள் சபைக் கட்டிடத் தின் கோபுரத்திலுள்ள மணிக்கூட்டின் பெயர்: பிக் பென் (Big Ben).

35. பிரான்சிய அரசியல் புரட்சியின்போது பாரிஸில் தகர்த் தெறியப்பட்ட அந்நாட்டின் மறியல் சாலை: பஸ்ரீல்.

50. இங்கிலாந்தில் தரமான பருத்திப் புடவைகள் உற்பத்தி செய் யப்படும் நகரம்: மஞ்செஸ்ரர்.

51. "இந்தியாவின் மஞ்செஸ்ரர்" என அழைக்கப்படும் நகரம்: பம்பாய்.

52. மகாத்மா காந்தியின் சமாதி அமைந்துள்ள இடம்: டெல்கி நகரில் யமுனா ஆற்றங் கரையிலுள்ள 'ராஜ் காற்'

53. பிரித்தானிய நாட்டின் பிரதம இராணுவக் கல்லூரின் பெயர்: சாண்ட்ஹேஸ்ற் இன்ஸ்ரிரியூற். அதேபோன்று அமெரிக்காவி லுள்ள இராணுவக் கல்லூரியின் பெயர்: வெஸ்ற் பொயின்ற்.

54. 'வார்தா திட்டம்' எதனுடன் தொடர்புடையது? காந்நீய சிந்தனையுடன் கூடிய கல்வித்திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. இந்தியாவில் பூமிதான இயக்கத்தை ஆரம்பித்தவர்: ஆச்சாரியா வினோபா பாவே, காந்திஜியின் ஓர் உண்மையான உத்தம சிடன்.

56. சமரேகையால் இரு சம பாதிகளாகப் பிரிக்கப்படும் கண்டம்: ஆபிரிக்கா.

57. உலகின் முதலாவது சாதனைக்குரியவர்; ஒரு நாட்டின் பிரதம அமைச்சராக இருமுறை இருந்த முதல் பெண்மணி: சிறிமாவோ பண்டார நாயக்கா, இலங்கை.

ஐரோப்பிய நாடொன்றின் முதல் பெண் பிரதமர்: மார்கறற் தாட்ஷர் —இங்கிலாந்து,

58. ஜனாதிபதிப் பதவியை அப்பதவிக்குரிய காலம் முடியுமுன் துறந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி: றிச்சட் நிக்சன்,

59. சீனாவைத்தரிசித்த முதல் ஐரோப்பியர்: மார்க்கோபோலோ.

60. இந்தியாவிற் கெதிராகப் படையெடுத்த முதல் ஐரோப்பியர் மகா அலெக்சான்டர்.

61. இலங்கையைத் தரிசித்த முதல் சீன யாத்திரிகன்: பாகியன்.

62. "டீற்றொயிட்" என அழைக்கப்படுவது: அமெரிக்காவின் நகரங்களில் ஒன்று; மோட்டார் வாகன உற்பத்திக்குப் புகழ்பெற்ற இடம்.

63. "சரநத்"தின் (இந்தியா) சிறப்பு: புத்தபெருமான் தனது முதற் சற்சங்கத்தை நடாத்திய இடம்.

64. "ஜாதக கதைகள்" யாவை? புத்தபகவானின் 547 அவதாரங்களைக் குறிப்பன. (போதிசத்தவர்களின்.)

65. "ஈசாப்பு கதைகள் யாவை? பெரிய உண்மைகளை எளிமையான முறையில் உணரவைக்கும் நீதிக்கதைகள் — இவற்றைக் கூறியவர் ஈசாப் எனும் ஓர் கிரேக்கர்.

66. "எசல பெரகரா": கண்டிமா நகரில் பௌத்தர்களால் எடுக்கப்படும் பெருவிழா.

67. "ஸல்" என அழைக்கப்படுபவர்: நபிநாயகம் அவர்கள்.

68. "அக்காலி டால்" என்பது: சீக்கியரின் பிரதான கட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. "எல்லைக் காந்தி" என அழைக்கப்படுபவர்: சுதந்திரப் போரில் இந்தியக் காங்கிரசின் முன்னணித் தொண்டர். இந்தியாவி லிருந்து முஸ்லிம்கள் பிரிந்து பாகிஸ்தான் என தனிநாடு அமைப்பதை எதிர்த்தவர். உபகண்டத்தின் ஐக்கியத்தை விரும்பியவர். காந்தியின் சிறந்த சீடர்களில் ஒருவர். பெயர் கபார் கான். 1989ல் அமரராகி விட்டார்.

70. சோக்கிறற்றீஸ்: கிரேக்கதேசம் நஞ்சூட்டிக்கொன்ற பேரறிஞன்.

71. "சுவெற்லானா சாவிற்ஸ்காயாவின் (Svetlana Savitskaya) சிறப்பு: முதல் பெண் விண்வெளிப் பயணி — ருஷியர். இரண்டாம் முறையும் 18-7-1984 சோயுஸ் விண்கலம் T 12ல் விண்வெளிக்கு அனுப்பப்பட்டவர்.

72. "றூபிள்" — ருஷிய நாணயம்.

73. "குமனோ" — நம் நாட்டில் பறவைகளுக்காகிய சரணாலயம்.

74. "மெரினோ" — செம்மறி ஆட்டினத்தைச் சேர்ந்தது: இதன் மயிர் கம்பளிப்புடவை உற்பத்திக்கு உபயோகப்படும்.

75. "கரால்" என அழைக்கப்படுவது: காட்டு யானைகளை பிடிப்பதற்கு அமைக்கப்படும் பொறிக்கூடுகள்.

76. ஓமார் காயம் — றுபாயற்: வரலாற்றுப் புகழ்பெற்ற பாரசீகக் கவிஞன்.

77. "ஷேஸ் மான் ஹற்றன்" என அழைக்கப்படுவது: அமெரிக்காவின் மிகப் பெரிய 3 வங்கிகளில் ஒன்று: இது தன் கிளையொன்றினை இலங்கையிலும் ஆரம்பிக்கிறது.

78. "திரிபோஷ": குழந்தைகளுக்கு இலவசமாக அரசினால் வழங்கப்படும் போஷாக்குள்ள உணவு.

79. "வங்கிகளின் வங்கி" என அழைக்கப்படுவது: மத்தியவங்கி.

80. "காஷ்மீர் சிங்கம்" என அழைக்கப்படுபவர்: காஷ்மீரின் முதலாவது முதல் அமைச்சர் — ஷேய்க் அப்துல்லா. அவரின் மகனே பறூக் அப்துல்லா, அவரும் காஷ்மீரின் முதல் அமைச்சராகவிருந்தார்.

81. பட்டுநூல் செய்கையை நம் நாட்டில் அபிவிருத்தி செய்ய உதவ முன்வந்துள்ள நாடு: தென் கொரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. M. R. A. ஸ்தாபனத்தை உருவாக்கியவர்: பிராங் பஷ்மன் (Frank Buchman) 1938ல். வெறுப்பு, பயம், அவா (Hate Free, Fear Free, Greed Free) அற்ற உலக மனித சமுதாயத்தை ஆக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனம்.

83. ''வூல் சாக்'' (Wool Sack) என்பது: பிரித்தானிய பாராளுமன்ற மேற்சபையாகிய பிரபுக்கள் சபையின் அக்கிராசனர் இருக்கும் ஆசனம்.

84. 2100-ம் ஆண்டளவில் உலகின் சனத்தொகை எவ்வளவாக இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது? 10,185 மில்லியன் என. இது இன்றைய சனத்தொகையின் இரு மடங்குக்குமேல் ஆகும்.

85. "திவெகி'' எனப்படுவது: மாலைதீவு மக்களின் தேசியமொழி.

86. ''SS 20'' எனக் குறிப்பிடப்படுவது: சோவியத் ருஷியா (அமெரிக்க நியூகிலியர் ஆயுதங்கள் பேஜிங், குறுயிஸ் போன்று) உற்பத்தி செய்த நியூகிலியர் ஏவுகணைகள்.

87. ''மின்சிங் லேன்'' என்பது: லண்டனில் தேயிலை போன்ற வெளிநாட்டுப் பொருள்கள் ஏலத்தில் விற்கப்படும் சந்தை.

88. மெல் மெடுரா (Mel Medura): லங்கா சுமித்திராயோ போன்று போதைவஸ்து குடிப்பழக்கம் ஆகியவற்றிற்கு ஆளாகியவர்களின் புனர்வாழ்விற்கு பணியாற்றும் சமூக நிறுவனம்.

89. இலங்கையிலுள்ள ஏற்றுமதிக் கிராமங்கள்: அவற்றின் தொகை 21. மத்திய கிழக்குப் போன்ற நாடுகளுக்கு மிளகாய் முதலிய பண்டங்களை ஏற்றுமதி செய்கின்றன.

90. பேராசிரியர் P. B. சன்னஸ்கல: சிங்கள அகராதி ஆக்கப் பணியின் பிரதம ஆசிரியர்.

91. போதை வஸ்து குற்றத் தடுப்பு பணிக்கு உதவிசெய்யும் வகையில் மேற்கு ஜேர்மனி இலங்கைக்கு அளித்துள்ள உதவி: போதை வஸ்துக்கள் வைத்திருப்பவர்கள், உபயோகிப்பவர்கள் ஆகியோரை மோப்பம் பிடிப்பதன் மூலம் காட்டிக்கொடுக்கும் ஒன்பது பயிற்றப்பட்ட நாய்களை இலங்கைப் பொலிசாருக்கு அன்பளிப்புச் செய்தமை.

92. சிங்கள பாரம்பரிய சங்கீத சாஸ்திரத்தின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய சங்கீத மேதை: லயனல் எதிரிசிங்க.

93. ஸ்டான்புல்லிலிருந்து சிங்கப்பூர் வரையும் அமைக்கப்படவிருக்கும் மிக நீளமான புகையிரதப்பாதை: ரிரான்ஸ் ஏசியன் புகையிரதப் பாதை: (Trans Asian Railway.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. வார்தா கல்வித் திட்டம்: காந்தியால் உருவாக்கப்பட்டது. வாழ்க்கைக்கு வேண்டிய தொழிற் கல்வியை அடிப்படையாகக் கொண்டது.

95. ஏஞ்ஜெல் டிறிக்கொலி (Angele Tricolie):- போயிங் ஜெற் விமானத்தைச் செலுத்துவதற்கு தகைமை பெற்ற முதலாவது உலகப் பெண் விமானி, இத் தகைமையை யூலை 1984ல் பெற்றார்.

96. வளர்முக நாடுகளின் சிறார்களின் நல்வாழ்வுக்குப் பணி யாற்றும் நோர்வே நாட்டு ஸ்தாபனம்: றெட்பானா (REDD BARNA நவம்பர் மாதம் 1945ல் ஸ்தாபிக்கப்பட்டது.

97. உள்ளூர் சாதாரண, பதிவு செய்த கடுகதி தபால், தந்தி சர்வதேச விமானக் கடிதம், வானொலி, தொலைக்காட்சி போன்ற வற்றின் கட்டண விபரங்களை அறிந்திருக்கவும்.

## யாழ்ப்பாணத்திலிருந்து பின்வரும் இடங்களுக்கு தெருமார்க்கமாக உள்ள தூரம்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | — | 247 | மைல் | 398 | கி. மீ. |
| கண்டி | — | 200 | ,, | 322 | ,, |
| மாத்தறை | — | 347 | ,, | 558 | ,, |
| திருகோணமலை | — | 150 | ,, | 241 | ,, |
| மட்டக்களப்பு | — | 238 | ,, | 383 | ,, |
| நுவரெலியா | — | 248 | ,, | 399 | ,, |
| அம்பாந்தோட்டை | — | 395 | ,, | 636 | ,, |
| அனுராதபுரம் | — | 122 | ,, | 196 | ,, |
| பதுளை | — | 281 | ,, | 452 | ,, |
| காலி | — | 319 | ,, | 513 | ,, |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## I. உலகில் மிக விசாலமான

கண்டம் — ஆசியா (17 . 3 மில்லியன் ச. மைல்)
தீவு — கிறீன்லாந்து (840,000 ச. மைல்)
குடாநாடு — அரேபியா (1.25 மில்லியன் ச. மைல்)
நாடு — ருஷியா (8. 57 மில்லியன் ச.மைல்)
சமுத்திரம் — பசுபிக் (7 மில்லியன் ச. மைல்)
நன்னீர் ஏரி — லேக் சுப்பீரியர் (U. S. A. 31,820 ச. மைல்)
உப்புநீர் ஏரி — கஸ்பியன் கடல் (U. S. S. R. 169,300 ச. மைல்)
நதி — அமேசன் (தென் அமெரிக்கா)
பாலம் — ஒக்லண்ட் பாலம் (சான்பிரான்சிஸ்கோ)
வனாந்திரம் — கோபி (ஆசியாவில்)
,, — சகாரா (ஆபிரிக்காவில்)
நகரம் — ஷங்காய் (சீனா)
அரசாங்க கட்டிடம் — பென்ரகன் (U. S. A. இராணுவ தலைமைக் காரியாலயம்)
வீதி — புறோட்வே (நியூயோர்க்)
கிரகம் — வியாழன்

## II. உலகில் மிக நீளமான

நதித்தொடர் — மிசூறி மிசிசிப்பி (U. S. A.)
நதி — நைல் (எகிப்து)
மலைத்தொடர் — அன்டிஸ் (தென் அமெரிக்கா)
வீதி — பான் அமெரிக்கன் வீதி 22,300 Kms.
புகையிரதப்பாதை — திரான்ஸ் சைபீரியன் புகையிரதப் பாதை (சைபீரியா)
சுவர் — சீனப்பெருமதில்

## III. உலகில் மிக உயர்ந்த

மலைத்தொடர் — இமாலயம்
சிகரம் — எவரெஸ்ற் ( 29,028 அடி)
கோபுரம் — T.V. கோபுரம், வடடக்கோற்ரா (2063 அடிஉயரம்
சிலை — சுதந்திரச் சிலை, நியூயோர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. உலகில் மிகப் பாரிய

பூங்கா — கோபு தேசிய பூங்கா, சாம்பியா
மாளிகை — வற்றிக்கான் மாளிகை, உரோமாபுரி
நூதனசாலை — அமெரிக்க இயற்கை வரலாற்றுச்சாலை
நூலகம் — U. S. காங்கிரஸ் நூலகம்

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு — இந்தியா, 351 மில்லியன் வாக்காளரைக் கொண்டது

மிக நீண்ட குகை — ஜப்பான் டானாகுகை (134 மைல்நீளம்)

மிகப் பெரிய நீர்வீழ்ச்சி — வெனிசுலா (5000 அடி உயரமுடையது)

மிக ஆழமான கடல் — பிலிப்பைன்சுக்கு அருகிலுள்ள மின்டானியோ (சுமார் 5 மைல் — ஆழமுடையது)

மிக உயர்ந்த அணைக்கட்டு — கூவர் டாம் U.S.A. (726 அடி உயரம்)

உலகின் கூரை : பமீர் (மத்திய ஆசியாவிலுள்ளது)
மிக உயரமான பறவை : தீக்கோழி

மிகப் பெரிய வைரக்கல் சுரங்கம் : கிம்பலி, (தெ. ஆபிரிக்கா)

மிகக் கூடிய மழை வீழ்ச்சி உள்ள இடம் : சிரபுஞ்சி, (அசாம்)

## பின்வரும் நாடுகளின் பழைய — புதிய பெயர்கள்

| V. பழைய பெயர் | | புதிய பெயர் |
|---|---|---|
| அபிசீனியா | — | எத்தியோப்பியா |
| பஸ்ரு வாலாந்து | — | லெசெரதோ |
| கம்போடியா | — | கப்பூச்சியா |
| சிலோன் | — | ஸ்ரீ லங்கா |
| கொங்கோ | — | ஷயர் |
| டச்சு கிழக்கிந்தியா | — | இந்தோனேசியா |
| கோல்ட் கோஸ்த் | — | கானா |
| ஹொலத்து | — | நெதர்லாந்து |
| இந்தியா | — | பாரதம் |
| மெசொபோரேமியா | — | ஈராக் |
| வடறொடேசியா | — | சாம்பியா |
| தென்றொடேசியா | — | சிம்பாப்வே |
| பாரசீகம் | — | ஈரான் |
| சீயம் | — | தாய்லாந்து |
| தென் மேற்கு ஆபிரிக்கா | — | நமிபியா |
| ரங்கனிக்காவும் சான்சிபாரும் | — | ரான் சானியா |
| பெக்குவானாலாந்து | — | பொற்ஸ்வானா |
| நைசாலாந்து | — | மலாவி |
| பர்மா | — | மயன்மார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## ஐ. நா. ஸ்தாபனம் (U. N. O.) பற்றிய பிரதான குறிப்புகள்:

1. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் 50 நாடுகள் சான்பிரான்சிஸ்கோ நகரில் ஒன்று சேர்ந்து எதிர்காலத்திலாவது மனித சமுதாயமும் நாகரீகமும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்துடன் யூன் 25, 26, 1945ல் ஐ. நா. சாசனம் ஒன்றினை உருவாக்கின. அதன் பிரகாரம் 24-10-1945ல் ஐ. நா. சபை உதயமாகியது.

2. ஒவ்வோர் ஆண்டிலும் அக்டோபர் 24ம் திகதியை ஐ. நா. தினமாக உலக நாடுகள் அனுஷ்டித்து வருகின்றன.

3. ஐ. நா. வின் கொடி நீல நிறப் பின்னணியில் இரு வளைந்த ஒலிவ் மரக்கிளைகளுக்கிடையில் உலகப் படத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது,

4. ஐ. நா. வின் உத்தியோக மொழிகள்: ஆங்கிலம், பிரெஞ், ருசியன், ஸ்பானிஸ், சீனம், அரபிக் ஆகியனவாம். ஆயினும் ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியுமே அதிகம் உபயோகத்திலுள்ளன.

5. ஐ. நா வின் தலைமைக் காரியாலயம்: மான்காற்றன் தீவில் நியூயோர்க் நகரில் 17 ஏக்கர் நிலப்பரப்புக் காணியில் அமைந்துள்ளது. இந் நிலத்தைத் தனிநபர் ஒருவர் ஐ. நா. வுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அவரே அமெரிக்க தனவான் என உலகப் புகழ் படைத்த ஜோன் டி றொக்பெல்லர் ஆவர். இன்று இந்நிலம் அகில உலகினுக்கும் சொந்தமான பூமி என பெருமையுடன் அழைக்கப்படுகின்றது.

6. ஐ. நா. வில் அங்கத்துவ உரிமையிழந்த நிலையில் இருக்கும் நாடுகள்:

(அ) தேசிய சீனா (ரைவான்). மக்கள் சீனக் குடியரசு உறுப்புரிமை பெற்றதும் தேசிய சீனா தன் அங்கத்துவ உரிமையை இழக்க நேரிட்டது.

(ஆ) வட, தென் கொரிய நாடுகள்

(இ) சுவிற்சிலாந்து — இது உலக விவகாரங்களில் நடு நிலைமையை விரும்புவதால் வல்லரசுகளின் மோதல்களைத் தவிர்க்கும் நோக்குடன் தானாகவே ஐ நா. அங்கத்துவ உரிமையைப் பெற விரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஐ. நா. வில் உள்ள உறுப்புக்களின் தொகை : 6 அவையாவன:

| | |
|---|---|
| பொதுச்சபை | பாதுகாப்புச்சபை |
| பொருளாதார, சமூகசபை | நம்பிக்கைப் பொறுப்புச்சபை |
| சர்வதேச நீதிமன்றம் | காரியாலயம். |

8. ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தொகை: 15. இவற்றில் 05 நாடுகள் நிரந்தர உறுப்பினராவர். அவை முறையே: ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ருஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகியனவாம். நிரந்தரமற்ற ஏனைய 10 அங்கத்துவ நாடுகள் இரண்டாண்டிற்கொருமுறை பொதுச் சபையால் கீழ்க்காணும் பிரதிநிதித்துவ விகிதாசாரப்படி தெரிவுசெய்யப்படுவர், (அ) ஆபிரிக்க ஆசிய நாடுகளிலிருந்து — 05, கிழக்கு ஐரோப்பா — 01 : லத்தீன் அமெரிக்கா — 02 : மேற்கு ஐரோப்பாவும் ஏனைய பகுதிகளிலுமிருந்து—02.

9. ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்குள்ள விசேட அதிகாரம்; ''வீட்டோ'' என அழைக்கப்படும்.

10. ஐ. நா. வின் சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்திலுள்ள ஹேக் நகரில் அமைந்துள்ளது. நீதியரசர்கள் தொகை 15. திறமை அடிப்படையில் இவர்கள் பல நாடுகளிலிருந்து பொதுச் சபையாலும் பாதுகாப்புச் சபையாலும் தெரிவு செய்யப்படுவர். தெரிவுசெய்யப்பட்ட நீதியரசர்கள் 09 வருடம் சேவையாற்றுவர்.

11. ஐ. நா காரியாலயம் — பொதுச் செயலாளர் நாயகம் ஒருவரின் தலைமையில் சகல நிர்வாக விடயங்களுக்கும் பொறுப்பாகவிருக்கும்.

12. ஐ. நா. பொருளாதார, சமூக சபை 54 உறுப்பினர்களைக் கொண்டது. அவற்றுள் 09 உறுப்பினர்கள் வருடாவருடம் மூன்று ஆண்டு காலத்திற்கு தெரிவாவர். இச் சபை உலகின் சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார, சுகாதார அபிவிருத்திக்குப் பொறுப்பாகவுள்ளது. இச் சபையின் கீழ் பணியாற்றும் பொருளாதார சபைகளாவன :

(Economic Commissions)

ஆபிரிக்காவுக்கு — E. C. A.

ஆசியா, பசுபிக் பிராந்தியம் — ESCAP

மேற்கு ஆபிரிக்கா — EWCA

ஐரோப்பா — ECE

லத்தீன் அமெரிக்கா — ECLA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஐ. நா. சபையின் கீழ் உள்ள சில விசேட ஸ்தாபனங்கள் : (SPECIALIZED AGENCIES)

| | பெயர் | ஆரம்பம் | தலைமைக் காரியாலயம் |
|---|---|---|---|
| அ. | ஐ. நா. கல்வி, விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் (UNESCO) | 1946 | பாரிஸ் |
| ஆ. | உணவு, விவசாய ஸ்தாபனம் (FAO) | 1945 | உரோமாபுரி |
| இ. | உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) | 1948 | ஜெனிவா |
| ஈ. | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) | 1919 | ஜெனிவா |
| உ. | சர்வதேச அணுசக்தி நிலையம் (IAEA) | 1957 | வியன்னா |
| ஊ. | சர்வதேச நிதியம் (I. M. F) | 1945 | உவாஜிங்ரன் |
| எ. | சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி (IBRD) | 1945 | உவாஜிங்ரன் |
| ஏ. | சர்வதேச சிவில் விமான போக்குவரத்து ஸ்தாபனம் (ICAO) | 1947 | மொன்றீல் |
| ஐ. | சர்வதேச தபால் யூனியன் (IPU) | 1975 | பேர்ன் |
| ஒ. | ஐ. நா. சர்வதேச சிறார்களின் அவசரகால நிதி (UNICEF) | 1946 | நியூயோர்க் |

14. ஐ நா. ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகத்தின் பதவியை இன்றுவரை வகித்தவர்களின் பெயர்ப் பட்டியல் :

1. Trygve Lie ( ரிறைக் லை )
2. U Thant ( உ தான்ற் )
3. Dag Hammarskjold ( டாக் ஹமஷில்ட் ) இவர் ஆபிரிக்காவில் விமான விபத்தில் சிக்குண்டு இறந்தார்.
4. Kurt Waldheim ( ஹேற் வால்டெயிம் )
5. Javier Peres de Cueller ( பெரஸ் டி கியூலர் )
6. Boutros Ghalia ( போற்றொஸ் ஹாலியா ) இவரே இன்றைய ஐ. நா. பொது செயலர்

15. ஐ. நா வின் செயலாளர் நாயகத்தை நியமிக்கும் பொறுப்பும் பணியும் யாருடையது? ஐ. நா. பாதுகாப்புச் சபையின் சிபாரிசுடன் பொதுச் சபையால் செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

நாடுகளுக்கிடையே சிக்கல்களை நீக்கி, சர்வதேச அல்லது பிரா ந்திய அமைப்பில் வர்த்தக வியாபார, பொருளாதார அபிவிருத்தியை மேற் கொள்ள ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள்:

(அ) ஐரோப்பிய பொதுச் சந்தை அமைப்பு (ECC) 1957ல் உருவாக்கப்பட்டது. பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி. பெல்ஜியம், ஒல்லாந்து. லக்சம்பேர்க், இத்தாலி, ஸ்பெயின், பிரித்தானியா, போர்த் துக்கல் ஆகிய 9 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவ்வமைப்பில் மேலும் 20 நாடுகள் இணை அங்கத்துவம் (Associate Membership) பெற்றுள்ளன.

(ஆ) வியாபாரம், அபிவிருத்தி பற்றிய ஐ. நா. ஒன்றியம் (உங்ராட் — UNCTAD) 1964ல் ஐ. நா பொதுச்சபையால் உருவாக் கப்பட்டது. இதன் நோக்கம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சர்வதேச வியாபாரம், மூலப் பொருள்கள் ஏற்றுமதி வகையில் கூடிய ஆதாயம் பெற்றுக்கொடுத்தல், வர்த்தக அபிவிருத்தித் துறைக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கல்.

(இ) கொமின் கொன் நிறுவனம்: இது கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகளின் வர்த்தக அபிவிருத்தி கருதி நிறுவப்பட்டதாகும். இதில் அங்கம் வகிக்கும் நாடுகள்: ருஷியா, கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி, செக்கோசிலோவேக்கியா, போலந்து, ருமேனியா, பல்கேரியா ஆகியனவாம் (COMECON Council for Mutual Economic Assistance.)

(ஈ) வர்த்தகம், தரிவு உடன்படிக்கை நிறுவனம் (CATT) சர்வ தேச வியாபாரத் தரிவுகளையும் மற்றைய தடைகளையும் நீக்கி வர்த்தக முன்னேற்றத்திற்கு உழைத்தல்.

(உ) தூரகிழக்கு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவியளிக்கும் வங்கியின் பெயர்: ஆசிய அபிவிருத்தி வங்கி: 1964ல் நிறுவப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) தென் கிழக்கு ஆசிய நாடுகளின் நிறுவனம் : ''ஆசியான்'' (ASEAN) என அழைக்கப்படும் நோக்கம்: மேலே தரப்பட (ஆ) வில் உள்ளவாறு. இதில் அங்கம் வகிக்கும் நாடுகள்: சிங்கப்பூர், மலேசியா, புறூனி, அவுஸ்திரேலியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ்.

(எ) தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு ஸ்தாபனம் (SAARC — South Asian Regional Co-operation). இது ''ஆசியான்'' போன்று ஸ்ரீலங்கா, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ், பூற்ரான், மாலைதீவுக் குடியரசு ஆகிய ஏழு நாடுகளின் பொருளாதார, வர்த்தக, விவசாய, தொழில்நுட்ப, கல்வி, சுகாதார அபிவிருத்திக்கு வளம்படைத்த நாடுகளின் உதவியுடன் செயற் திட்டங்களை வகுக்க அமையும் ஒன்றியமாகும். இவ்வமைப்பின் காரியாலயம் நேபாளத்தின் தலைநகரம் காத்மாண்டில் உளது.

# 13

**மனித இன நல்வாழ்விற்கும் உயர்ந்த இலட்சியங்களுக்குர் உழைத்த உத்தமர்கள் / இயக்கங்கள் / தத்துவங்கள் பற்றிய குறிப்புகள்!**

**1. காந்திஜி:** இருபதாம் நூற்றாண்டின் மாணிக்க மனிதன்; நவ பாரதத்தின் பிதா; ஆசிய ஜோதி; அகிம்சாமூர்த்தி; சர்வலோக நாயகன்; அரிச்சந்திர மகாராசன் போன்று உண்மை, சத்தியம் ஆகிய இரண்டினையும் கடைப்பிடித்து வாழ்ந்து வழிகாட்டியவர்; மகாத்மா எனப் போற்றப்பட்டவர்; இவரே மோகனதாஸ் கரம்சந் காந்தி; காந்தி 2-10-1869ல் பிறந்து 30-1-1948ல் இறந்தார். இந்திய சுதந்திரத்துக்கு அகிம்சை நெறியில் உழைத்தவர். இவரால் எழுதப்பட்ட நூல்களில் சிறப்புக்குரியது; ''எனது சத்திய சோதனை''. இயேசுநாதர், சோக்கிறற்றீஸ், ஆபிரகாம் லிங்கன், ஜோன் எவ். கெனடி, அன்வார் சதாத் போன்று மகாத்மாவும் நாத்ராம் விநாயக் கோட்சே எனும் இனமத வெறியனொருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**2. ஆச்சாரியா வினோபாபாவே:** மகாத்மா காட்டிய வழி நின்ற உத்தமர்; பூமிதான இயக்கத்தின் தந்தை; தம் இலட்சியங்களை பல பாத யாத்திரைகள் மூலம் விளக்கி மக்கள் உள்ளத்தை தூய்மையடையச்செய்தவர்; சர்வோதய இயக்கத்தை நாட்டியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஜெயபிரகாஸ் நாராயண்: சிறந்த சமதர்மவாதி; சர்வோதய தலைவர்; இந்திய அரசியலில் பல்லாண்டு பணியாற்றியபின், வினோபா பாவேயின் சர்வோதய — பூமிதான இயக்கத்தில் இறக்கும்வரை தொண்டாற்றியவர்.

4. மகா அலெக்சாண்டர்: கிரேக்க மன்னன்; உலக வரலாற்றின் தலை சிறந்த படைத்தலைவன்; வீரன்; கிழக்கையும் மேற்கையும் இணைத்தவர்.

5. பேடன் பௌவ்வெல் பிரபு: சாரணச் சிறுவர் இயக்கத்தை 1908ல் ஸ்தாபித்தவர். ஆங்கிலேயர்

6. இப்போ கிறேற்ஸ்: வைத்திய சாஸ்திரத்தின் தந்தை.

7. புலோரன்ஸ் நயிற்றின் கேர்ல்: நவீன தாதிச் சேவையின் ஸ்தாபகர்; "தீபமேந்திய சீமாட்டி" யெனவும் அழைக்கப்படுவார்: ஆங்கிலேயர்.

8. ஆபிரகாம் லிங்கன்: தலைசிறந்த அமெரிக்கன்; கீர்த்திமிகு அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவர்; ஏழையாய் மரக்குத்திக் குடிசையில் அவதரித்து வெள்ளை மாளிகையில் அதிபராக இருந்த சிறப்புப் பெற்ற வர். அமெரிக்காவில் நீக்ரோ இன மக்களின் அடிமை வாழ்க்கையை ஒழித்த உத்தமர்; "மக்களுக்காக, மக்களால், மக்களுடைய அரசாங்கம்" என்ற வரைவிலக்கணத்தால் ஜனநாயக ஆட்சிமுறைக்கு விளக்கம் கொடுத்தவர்; கெற்றீஸ் பேர்க் பிரசங்கம் இவரால் நிகழ்த்தப்பட்டது; வடக்கு—தெற்குப் பகுதிகளுக்கிடையில் நடந்த அமெரிக்க உள்நாட்டு யுத்த முடிவில் அரிய கருத்தும் உணர்ச்சியுமிக்க அப்பிரசங்கத்தை நிகழ்த்தியுள்ளார்.

9. கொன்பியூசியஸ்: சீன ஞானிகளுள் மிகப் பெரியவர் எனக் கருதப்படுபவர்.

10. மாட்டின் லூதர் கிங்: அமெரிக்க நீக்ரோ இனத்தைச் சார்ந்த உத்தமர்; மகாத்மாகாந்தி போன்று தன் இனத்து மக்களின் உரிமைகளுக்குச் சாத்வீக முறையைப் பின்பற்றி உழைத்தவர். 1965ம் ஆண்டு சமாதானத்திற்குரிய நோபல் பரிசையும் பெற்றவர். அவர் 1967ல் ஏர்ல்றே என்ற நிறவெறி கொண்ட அமெரிக்க வெள்ளையரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11. டாக்டர் லட்விக் சமன்கோப்: "எஸ்பரான்ரோ" என அழைக்கப்படும் மொழியை உலக மொழியாகப் பிரயோகிப்பதற்கென 1887ல் பிரகடனப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. **யோசேப் மக்கடம், ரெல்போட்:** இருவரும் நாகரிக வளர்ச்சிக்குரிய வகையில் பள்ளம் மேடு அற்ற முறையில் சிறந்த கற்பாறைகள், ரோட்டுக்கள் அமைக்கும் முறையைக் காட்டியவர்கள்,

13. **ஜோன் டி. றொக்பெல்லர்:** கல்வி, மதம், தொழில் வளர்ச்சி ஆகிய பல விடயங்களுக்குக் கோடிக்கணக்கான தம் செல்வங்களைப் பாரி போல் வழங்கிய அமெரிக்கக் கொடையாளி. ஐ. நா ஸ்தாபனத்திற்கு தம் சொந்த 17 ஏக்கர் நிலத்தை வழங்கி, அதனை அகில உலகிற்கும் உரித்துள்ள பொதுப் பூமியெனக் கூறி பெருமையடைந்தவர்.

14. **பைத்கரஸ்:** கேத்திர கணிதத்தின் தந்தை, கிரேக்கர்

15. **கெரோடற்ஸ்:** வரலாற்றின் தந்தை.

16. **யஸ்ரீனியன்:** உலக வழக்கிலுள்ள சட்டங்களை முதன் முதலில் சீராகத் தொகுத்தவர்; உரோமைச் சக்கரவர்த்திகளுள் ஒருவர்.

17. **சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில்:** 20ம் நூற்றாண்டின் தலைசிறந்த இங்கிலாந்தின் பிரதமர்; இராஜதந்திரி; இரண்டாவது உலக மகாயுத்தத்தில் உலகின் வெற்றிக்கு உழைத்தவர்; தாம் எழுதிய "யுத்த வரலாற்று" நூலுக்கு நோபல் பரிசும் பெற்றவர்.

18. **வூட்ரோ வில்சன்:** அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவர். "அரசாங்கமில்லாத ஒரு நாட்டை நான் விரும்பினாலும் சுதந்திரமாகப் பிரசுரிக்கப்படாத புதினப் பத்திரிகைகள் இல்லாத நாட்டை நான் வெறுக்கிறேன்" எனக் கூறிய ஜனநாயகவாதி.

19. **ஜவகர்லால் நேரு:** மகாத்மாவின் உத்தம சீடர்; சுதந்திர பாரதத்தின் முதல் பிரதமர்; சிறந்த எழுத்தாளர்; உயர்ந்த இலட்சியவாதி; ஆசியாகண்டத்தை அணிசெய்தவர்.

20. **சாணக்கிய (கௌடிலீய):** கி. பி. 4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். விஷ்ணுகுப்தா எனவும் அழைக்கப்பட்டவர்; "அர்த்தசாஸ்திரம்" என்ற நூலை எழுதியவர்.

21. **மானு:** புராதன இந்து சட்ட வல்லுனர், மனிதகுல வாழ்க்கை நெறியை வகுத்தவர்.

22. **குருநாநாக்:** சீக்கிய மதத்தை ஸ்தாபித்தவர்.

23. **ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்:** இந்தியாவில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பரமஞானி; விவேகானந்தரின் குரு; வேதாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. **சுவாமி விவேகானந்தர்:** இளமைப் பெயர் — நரேந்திரர்; இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்தவர்; இந்து சமய தத்துவத்தை முதன் முதலில் மேற்கத்திய நாடுகளுக்கு அறியச் செய்தவர்; உதார புருடர்; இராமகிருஷ்ணரின் அருள்பார்வை பெற்ற சீடன்.

25. **இரவீந்திரநாத் தாகூர்:** "வங்காளக் கவிக்குயில்" என அழைக்கப்படுபவர்; சிறந்த இலக்கிய கர்த்தா; 100க்கு மேற்பட்ட இலக்கிய நூல்கள், நாடகம், கவிதை முதலியனவற்றை எழுதியவர். "கீதாஞ்சலி" என்ற நூலிற்கு நோபல் இலக்கியப் பரிசை 1913ல் பெற்ற இந்தியர்; 1901ல் சாந்திநிகேதன் என்ற கல்லூரியை நிறுவியவர்; இது இன்று பல்கலைக்கழகமாக திகழுகின்றது. இந்திய தேசிய கீதத்தை யாத்தவர்; "மகாத்மா" என்ற சிறப்புப் பெயரைக் காந்தி மகானுக்கு வழங்கியவர்.

26. **கார்ல் மாக்ஸ்:** ஜேர்மன் பொருளாதார அறிஞர்: புரட்சிகர தீவிர சமூக, அரசியல் கருத்துடையவராய் இருந்தபடியால் தன் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். லண்டன் நகரில் குடியேறி எங்கெல்ஸ் என்பவருடன் சேர்ந்து "டாஸ் கப்பிற்றல்" என்ற நூலை எழுதி நவீன அரசியல் பொருளாதார சிந்தனையை உருவாக்கினார்; பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை.

27. **வண. வில்லியம் பூத்:** 1865ல் இரட்சணிய சேனையை (Salvation Army) ஸ்தாபித்தவர்.

28. **ஹென்றி டுநான்ற்:** 1864ல் ஜெனிவா நகரில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்கியவர்.

29. **வில்லியம் வில்பபோர்ஸ்:** ஆங்கிலேயர்; ஆபிரிக்கக் கறுப்பர்களைப் பிடித்து அடிமை வியாபாரம் செய்து வந்த முறையை ஒழிக்க உழைத்த உத்தமர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## மொழி, இலக்கியம்

1. தமிழ் தொண்டாற்றிய வெளிநாட்டு கத்தோலிக்க மதகுரு: வண. பிதா பெஸ்கி — இத்தாலியர்.

2. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மதகுரு: வண. ஜி. யு. போப் — ஆங்கிலேயர் — அங்கிலிக்கன் மதகுரு.

3. இலங்கைத் தமிழனும், கத்தோலிக்க மதகுருவும், கல்வி விற்பன்னரும், பன்மொழிப் பாண்டித்தியமுடையவருமான பெரியார்: வண. S. தனிநாயகம் அடிகளார்.

4. சூதாடி நாடிழந்த அரசனைக் காப்பியத் தலைவனாகக் கொண்ட காப்பியம்: நளவெண்பா.

5. ஈழத்தில் தமிழில் தோன்றிய முதற் பத்திரிகை: உதயதாரகை

6. முதன் முதலில் தமிழ் அகராதியைத் தொகுத்தவர்: யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் ஸ்தாபகரும் முதல் அதிபரும் கிறிஸ்தவ சமயப் பிரசாரகருமாகிய பீற்றர் பெசிவல் பாதிரியார்.

7. இலங்கையில் தமிழிலுள்ள நாட்டுப்பாடல்களைத் தொகுத்த பெருமைக்குரிய இருவர்: மு. இராமலிங்கம், சி. சதாசிவ ஐயர்.

8. தமிழிலுள்ள சமண, புத்த, கிறிஸ்தவ காப்பியங்கள் ஒவ்வொன்றின் பெயர்: சமணம் — சீவகசிந்தாமணி, பௌத்தம் — மணிமேகலை, கிறிஸ்தவம் – தேம்பாவணி.

9. ஈழத் தமிழனாய், முனிவனாய், பல்கலைக்கழகத் துறைத் தலைவனாய், விஞ்ஞான பட்டதாரியாய் விளங்கியவர்: சுவாமி விபுலானந்தர் (மட்டுநகர் மயில்வாகனனார்.)

10. கிரேக்க கவி ஹோமர், ஆங்கிலக்கவி மில்ரன் ஆகிய இருவருக்குமிருந்த ஒரே குறை: இருவருக்கும் கண் குருடு.

11. "எவொன் கவி" என அழைக்கப்படும் ஆங்கில இலக்கிய மேதை: வில்லியம் ஷேக்ஸ்பியர் — ஆங்கில இலக்கியத்திற்கு அணி செய்யும் நாடக ஆசிரியரும் கவிஞரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அயர்லாந்தின் ஷேக்ஸ்பியர் என உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் : ஜோர்ஜ் பேனாட் ஷோ.

13. தமிழ் அகராதியின் தோற்றத்திற்கு வழிகாட்டிய ஐரோப்பிய தமிழறிஞர்: வீரமாமுனிவர் என அழைக்கப்பட்ட இத்தாலியர். வண. பிதா பெஷ்கி.

14. உலகில் பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல்: திருக்குறள். திருக்குறளை ஓர் "பொது மறை" நூலாகச் சகல மதத்தவரும் ஏற்றுளர். மொத்தக் குறள்கள்: 1330.

15. தலைசிறந்த இஸ்லாமிய தமிழ்ப் புலவர் ஒருவர்: உமறுப் புலவர்.

16. பரிசுத்த பைபிளை தமிழில் மொழிபெயர்த்தவர்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

17. தமிழில் முதல் தோன்றிய நிகண்டு : திவாகரம்
,, ,, ,, அகராதி: சதுர அகராதி.

18. மொழி நூல் ஆராய்ச்சியில் வல்ல இலங்கையர் : சுவாமி ஞானப்பிரகாசர்.

19. தமிழில் உள்ள எழுத்துக்களின் வரி வடிவில் திருத்தஞ் செய்த ஐரோப்பிய அறிஞர் : வண. கால்ட்வேல் ஐயர்.

20. தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

# 15

## சில பிரபல்யமான நூல்களும் அவற்றை எழுதியோரும்:

| | |
|---|---|
| பெரியபுராணம் | — சேக்கிழார் பெருமான் |
| சீறாப்புராணம் | — உமறுப்புலவர் |
| திருவாசகம் | — மாணிக்கவாசகர் |
| திருப்புகழ் | — அருணகிரிநாதர் |
| புறநானூறு | — கணியன் பூங்குன்றன் |
| சிலப்பதிகாரம் | — இளங்கோ |
| இராமாயணம் | — வால்மீகி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மகாபாரதம் | — வேதவியாசர் |
| மகாவம்சம் | — மகாநம |
| இலியட்; ஒடிசி | — ஹேமர் |
| அர்த்த சாஸ்திரம் | — கௌடில்ய (சாணக்கிய) |
| மணிமேகலை | — சாத்தனார் |
| கீதாஞ்சலி | — கவி தாகூர் |
| ஆசியஜ்ஜோதி | — எட்வின் ஆர்நோல்ட் |
| என் சத்தியசோதனை | — மகாத்மா காந்தி |
| குடியரசு | — பிளாற்றோ |
| ஒரு உலகம் | -- வென்டல் வில்கி |
| யுத்தமும் சமாதானமும் | — லியோ ரொல்ஸ் ரோய் |
| சகுந்தலை வெண்பா | — சு. நடேசபிள்ளை |
| தேம்பாவணி | — வீரமாமுனிவர் |
| என்து போராட்டம் | — (Mein Kamf) அடோல்ப் கிட்லர் |
| இனியவை நாற்பது | — பூதன்சேந்தனார் |
| மேகதூதம், சாகுந்தலம், இரகு வம்சம், இருதுசங்காரம் | — காளிதாசன் |
| சிவநடனம் | — கலாஜோதி ஆனந்தகுமாரசுவாமி |
| ஜானகீகர்ண | — குமாரதாச |
| 1800 ஆண்டுகள் முன் தமிழர் | — கனகசபைப்பிள்ளை |
| இலங்கையின் வரலாற்றுத் தொடர்பு | — றோபேட் நோக்ஸ் |
| பகவத் கீதை | — வேதவியாசர் |
| தர்ம சாஸ்திரம் | — மானு |
| மனித உரிமைகள் (Rights of Man) | — தோமஸ் பெயின் |
| தேசங்களின் செல்வம் | — அடம் சிமித் |
| மாமா ரொம்பிக் குடிசை | — ஹறியற் பீச்சர் ஸ்ரோவ் |
| 1984 | — ஜோர்ஜ் ஓவெல் (புனைபெயர்) |

அவரின் உண்மையான பெயர்: வில்லியம் கோல்டிங்

# 16

## மறைந்தும் மங்காப் புகழுடன் விளங்கும் பெரியோர்:

1 சேர் பொன்னம்பலம் இராமநாதன்: நாட்டின் சகல மக்களாலும் தேசிய தலைவனாக மதிக்கப்பட்டவர், வேகமும் விவேகமும் நிறைந்தவர், படித்த இலங்கையரின் பிரதிநிதியாக அன்றைய சட்ட மன்றத்தில் அங்கம் வகித்தவர்; தமிழ்மொழி, இந்துமதம், இந்துமதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு உழைத்தவர்; இன்று யாழ். பல்கலைக்கழகமாக மாறியிருக்கும் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபகர். இவரின் உருவச்சிலை நாட்டின் பழைய பாராளுமன்ற முன்றலில் கெம்பீரமாகக் காட்சி விப்பதை இன்றும் பார்க்கலாம். இலங்கையின் வரலாற்றில் அழியாப் புகழ் பூத்த தமிழ்குடும்பத்தைச் சேர்ந்த பலரில் இவரும் ஒருவர்.

2. சேர். பொன்னம்பலம் அருணாசலம்: ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பட்டதாரி, பகிரங்க பரீட்சை மூலம் இலங்கை சிவில் சேவைக்கு தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கையர்; பதிவாளர் நாயகம் பதவியை வகித்த முதல் இலங்கையர்: இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்; இலங்கைக்கோர் பூரண பல்கலைக்கழகம் வேண்டுமென முதலில் சிந்தித்து செயலாற்றிய வர்; சிறந்த ஆத்மீக ஞானி; அறிஞன்; கல்விமான்; தேசாபிமானி; மேற்கூறியவரின் சகோதரன்.

3. சேர். முத்துக்குமார சுவாமி: மேற் கூறிய இருவரினதும் தாய் மாமன்; கேம்பிறிட்ச் பட்டதாரி; முதலாவதாக பரிஸ்டர் பட்டம் பெற்ற இந்து மதத்வர்; அரிச்சந்திர புராணத்தில் மயானகாண்டப் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விக்ரோரியா மகாராணி முன் நடித்து விருதும் பாராட்டுப பெற்றவர் அன்றைய இலங்கையின் சட்ட நிருபண சபை உறுப்பினர். உலகப் புகழ் பெற்ற கலாயோகி ஆனந்தகுமார சுவாமியின் தந்தை.

4. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி: மேற்கூறியவரின் மகன்; விஞ்ஞானப்பட்டதாரி; புதைபொருள், கனிப்பொருள் ஆராய்ச்சி வல்லுனர்; கீழைத்தேச கலையில் ஈடுபாடு கொண்டவர். அமெரிக்காவில் பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் கீழைத் தேச கலைத்துறை பேராசிரியராகக் கீர்த்தியுடன் பணியாற்றியவர்; "சிவநடனம்" போன்ற பல நூல்களை எழுதி உலக அறிஞர்களின் புகழைப் பெற்றவர்.

5. அதி கௌரவ டொன் ஸ்ரீபின் சேனநாயக்கா: நாட்டின் "சுதந்திர சிற்பி", 'தேசபிதா' என அழைக்கப்படுபவர்; சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர்; நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு உழைத்தவர்.

6. டட்லி சேனநாயக்கா: மேலே கூறியவரின் புதல்வர்; நாட்டின் இரண்டாவது பிரதமர்; நாட்டின் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர்.

7. சேர் ஜோன் கொத்தலாவல: நாட்டின் மூன்றாவது பிரதமர்; இவரின், கண்டாவெல வாசஸ்தலம் இன்று நாட்டின் இராணுவப் பயிற்சி கல்லூரியாகத் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சி. வை. தாமோதரம்பிள்ளை: சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் முதல் முறையாகச் சித்திபெற்ற ஈழத் தமிழர்; தமிழில் பல நூல்களை அச்சேற்றியவர்; சிறந்த தமிழ்ப்புலமை மிக்கவர்.

9. ஆறுமுகநாவலர்: தமிழ் மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்; எழுத்தாளர்; நாவன்மை மிக்கவர்; பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தவர். அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த நல்லூரில் உள்ள காணியில் ஓர் ஆராய்ச்சி நிலையம் அரசினரால் அமைக்கப்பட்டு வருகிறது.

10. அனகாரிக தர்மபாலா: பௌத்த சிங்கள மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்; மகாபோதி சங்கங்களை இந்தியாவிலும் இலங்கையிலும் ஸ்தாபித்தவர்.

11 சித்தி லெப்பை: இஸ்லாமிய மத, கல்வி மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்.

12. சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா: நாட்டின் முதல் கல்வி அமைச்சர், இலவசக் கல்வியை நாட்டில் புகுத்தியவர்.

13. ஆனந்த சமரகோன்: சிங்கள கவிஞன்; இலங்கையினது தேசிய கீதத்தை இயற்றியவர்.

14. டாக்டர் எஸ். ஏ விக்கிரமசிங்க: மருத்துவர், பொது உடமை கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.

15. டாக்டர் எ[illegible], எம். பெரேரா: முன்னைநாள் நிதி அமைச்சர்களில் ஒருவர்; இலங்கை சமசமாஜக் கட்சியின் ஸ்தாகர், 1979ல் அமரரானார்.

16. பிலிப் குணவர்த்தனா: முன்னைநாள் அமைச்சர்களில் ஒருவர். இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் முன்னோடி.

17. கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா: சமசமாசக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.

18. விமல் சுரேந்திரா: பொறியியலாளர்; நம் நாட்டின் மின், மின் சக்தி வலு அமைப்புப் பற்றிச் சிந்தித்த முன்னோடி.

19. மஞ்சுஸ்ரீ: த[illegible] சிறந்த ஓவியர்.

20. கேற் முதலியார் அமர சேகரா: சிறந்த ஓவியர். நூறு வயது வரை வாழ்ந்து 198[illegible] அமரத்துவமடைந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. **கலாநிதி பரண விதான :** வரலாறு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்.

22. **உபாலி விஜயவர்த்தன :** பிரபல தொழில் அதிபர், செல்வந்தர். பல தொழிற்துறைகளின் முன்னோடி; சொக்லேற் தயாரிப்பிலிருந்து உள்ளூர் விமான சேவை ஈறாகப் பல முயற்சிகளில் ஈடுபட்டு பொருளீட்டிய கோடீஸ்வாரர். ''இலங்கையின் பேர்லா'' எனக் கருதப்பட்டவர்; 1983இல் தமது சொந்த விமானத்தில் மலேசியாவிலிருந்து இலங்கை வந்து கொண்டிருக்கையில் விமான விபத்தில் சிக்குண்டு வாழ்க்கையை முடித்துக்கொண்டார்.

23. **ஏ. ஈ. குணசிங்கா :** இலங்கைத் தொழிற்சங்கத்தின் தந்தை.

24. **பேராசிரியர் சரத்சந்திரா :** நாடகம்.

25. **புத்ததாசன் :** சிங்கள மன்னனும், வைத்திய மேதையும்.

26. **உருக்மணி தேவி :** சினிமா, சங்கீதம்.

27. **ஒல்கொற் ஹென்றி ஸ்ரீல் :** அமெரிக்கர், இலங்கையில் பௌத்த மத மறுமலர்ச்சிக்கும் கல்வி அபிவிருத்திக்கும் உழைத்தவர்: கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் ஸ்தாபகர்.

28. **வண. பிக்கு நாரத**
29. **வண. பிஷொப் லக்ஸ்மன் விக்கரமசிங்க**
} 1983ல் அமரத்துவமடைந்த இரு பெருமதகுருமார்

30. **சேர். ஐவர் ஜெனிங்ஸ்:** இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது உப வேந்தர்.

31. **கெப்பிற்றிப் போல திசாவ:** கண்டிய சிங்கள பிரபு; கண்டிய மன்னன் ஆட்சியில் திசாவாகப் பணியாற்றியவர்; ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்தமையால் ஆங்கிலேயரால் கொல்லப்பட்டவர்.

32. **எட்மண்ட் சமரக்கொடி:** தலைசிறந்த சமதர்ம இடதுசாரி அரசியற் பிரமுகர்; தை, 1992 அமரரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## நம் நாட்டு வரலாற்றில் இன்று பிரபல்யமடைந்த பெரியார்கள் :-

1. கலாநிதி சிறில் பொன்னம் பெருமா !— அமெரிக்க, மேரிலாந்து பல்கலைக்கழக பேராசிரியர்: விண்வெளி ஆய்வு கூடத்தின் ஓர் பிரதான ஆராய்ச்சியாளர்: இன்று இலங்கையின் "அடிப்படை ஆய்வு மன்றம்" (Institute of Fundamental Studies) இனது தலைவர்: இம் மன்றம் புவி பௌதீக, புவி இரசாயன, புவி காந்த ஈர்ப்பு, மூல வளம் ஆகிய துறைகளில் ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

2. ஆர்தர் கிளார்க் : இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ற ஆங்கிலேயர், கட்டுப்பெத்தை பல்கலைக்கழக வேந்தர்: கற்பனை ரீதியில் விஞ்ஞானக் கட்டுரைகள் நூல்கள் எழுதுவதில் முன்னணி வகிப்பவர். இவரின் பெயரைக் கொண்ட விஞ்ஞான தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையமொன்று வெளிநாட்டின் உதவியுடன் அண்மையில் தலைநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3. மாலினி ஜெயசிங்க பீரிஸ்: பியானோ வாசிப்பதில் தலைசிறந்தவர்.

4. காமினி பொன்சேகா: முன்னணி சினிமா நடிகர்; பாராளுமன்ற உறுப்பினர். உப சபாநாயகர்.

5. பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர: தலைசிறந்த நாடக ஆசிரியர்.

6. டபிள்யூ. டி. அமரதேவா : பிரபல சிங்கள சங்கீத மேதை.

7. கே. குகதாசன் : தலைவர், சுதந்திர பொதுச் சேவை தொழிற்சங்க ஒன்றியம்.

8. ஏ. ரி. ஆரியரத்ன : இலங்கை சர்வோதய இயக்க கர்த்தா: 1982ல் பிலிப்பைன்ஸ் நாட்டினால் வழங்கப்பட்ட 'ரமோன் மக்சேசே' பரிசு பெற்றவர்.

9. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்: முன்னணிச் சிங்களத் திரைப்பட உற்பத்தியாளர்.

10. வி. எஸ். குமார் ஆனந்தன்: பல்வேறு சாதனைகள் ஆற்றி கின்னஸ் புத்தகத்தில் பல தடவைகளில் தம் பெயரைப் பொறிப்பித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சேர். றசிக் பரீட்: முஸ்லீம் மூதறிஞர்: கொடையாளன்: சமூக, சமயப் பணிகளில் முன் நின்றவர்: இலங்கை சோனகச் சங்கப் போஷகர், 90 வயதைத் தாண்டியும் தம் சமூக, சமயப்பணியில் அக்கறையுடன் உழைத்து அமரராகிவிட்டார்.

12. கலாநிதி டபிள்யூ. தகநாயக்கா: காலி பா. உ. இலங்கையின் முன்னாள் பிரதமர், முன்னாள் கல்வி அமைச்சர், சிரேஷ்ட அரசியல்வாதி.

13. வண. திசா பாலசூரியா: மதகுரு, இன மதங்களுக்கிடையே சமநீதி, ஒற்றுமை, நல்விளக்கத்திற்கு அயராது உழைப்பவர்.

14. சந்திரானந்தா டி. சில்வா: தேர்தல் ஆணையாளர்,

15. பிராட்மன் வீரக்கோன் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர்.

16 அர்ஷனா அலுவிகார: பேராசிரியர். உயர்கல்வி அமைச்சினதும் பல்கலைக் கழக மானியக் குழுவினதும் செயலாளர்.

17. தர்மதாசா வால்பொல: பிரபல சிங்களத் திரைப்பட பாடகர், அண்மையில் அமரரானார்.

18. பாராளுமன்ற செயலாளர் நாயகம்: நிஹால் செனிவரத்ன.

19. ஜனாதிபதியின செயலாளர் : விஜேயதாச

20. சபாநாயகர் : எம். ஏச். முகமட்

21. உதவி சபாநாயகர் ; காமினி பொன்சேகா

22. எதிர்க்கட்சித் தலைவர் : திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா

23. கணக்காளர் நாயகம் : காமினி எப்பா

24. பரீட்சை ஆணையாளர் : வேதமுல்ல

25. கொழும்பு பல்கலைக் கழக வேந்தர் :
பேராசிரியர் : அ. நடராசா

26. ஸ்ரீ லங்கா கண்தான வங்கியின் ஸ்தாபகத் தலைவர் :
கலாநிதி ஹட்சன் சில்வா

27. வேந்தர், திறந்த பல்கலைக் கழகம் : கலாநிதி காமினி கொறியா

28. உப வேந்தர், திறந்த பல்கலைச் கழகம் :

பேராசிரியர் தயானந்த விஜயசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விண்வெளி பற்றிய குறிப்புகள் :**

1. பூமி எத் தொகுதியின் உறுப்பினர் :
ஞாயிற்றுத் தொகுதி.

2. ஞாயிற்றைச் சுற்றி உள்ள கோள்களின் தொகை :
09. அவையாவன : புதன், வியாழன், வெள்ளி, சனி, செவ்வாய், பூமி, யுரான்ஸ், நெப்றியூன், புளூற்றோ.

3. சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் :
149,380,000 கி. மீ.

4. சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் :
384,719 கி. மீ.

5. ஞாயிற்றுத் தொகுதியின் மிகப்பெரிய கோள் :
வியாழன்.

6. சூரியனிலிருந்து மிகத் தொலைவிலுள்ள கிரகம் :
புளூற்றோ.

7. முதன் முதல் விண்வெளிக்குப் பயணஞ் செய்தவர் :
மேஜர் யூரி ககாரின் ( ருசியா )

8. முதன் முதலில் சந்திரத் தரையில் காலடி வைத்தவர்கள் :
நீல் ஆம்ஸ்றோங், எட்வின் அல்றின் ஆகிய இருவரும், ( அமெரிக்கர் ) 21-7-1979.

## உடல் நலம்

1. ''குவாசியக் கோர்'' என்பது : ஒரு நோய், புரதக்குறைவால் ஏற்படுவது. 2. உடலில் ''கல்சியம்'' இல்லாவிடில்; பல். எலும்பு ஆகியவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படும், 3. பழங்கள் உண்ணாவிடின் ஏற்படும் ஒரு நோய் : ஸ்கேவி. 4. தொற்று நோய்களை வருவிக்கும் இரு காரணிகள் : வைரசு, பக்றீரியா. 5. வாய் அவியலுக்கு காரணம்: உயிர்ச்சத்து ''B'' இன் குறைபாடு. 6. உமிழ் நீரில் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமிபாட்டு நொதியம் : தயலின். 7. குருதிச் சோகைக்கு எக் கனியுப் பின் குறைபாடு காரணமாயுள்ளது : இரும்பு. 8. உணவைச் சமைப்பதால் அழிந்துபோகும் உயிர்ச்சத்து : C. 9. சிறு பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் ''முக்கூட்டு வக்சின்'' ஆல் தடுக்கப்படும் நோய்கள் : ஏற்புவலி, குக்கல், தொண்டைக் கரப்பன். 10. உடலில் கிருமிகளை எதிர்த்துப் போராடுவது : வெண்குருதிக் கலன்கள். 11. மனிதனின் சாதாரண உடல்வெப்ப நிலை : 98·4°F ( 370C ). புகையிலையில் காணப்படும் நஞ்சு : நிக்கோற்றின். 12. காப்பியிலுள்ள நஞ்சுப் பதார்த்தம் : கபீன். 13. தேயிலையிலுள்ள நஞ்சுப் பதார்த்தம் : ரனின். 14. புகைத்தலினால் பாதிக்கப்படும் உறுப்பு ; நுரையீரல். முள்ளந்தண்டிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை : 33. 15. மலேரியா நோயைப் பரப்புவதற்கு காரணியாக இருப்பது: அனோபிலஸ் பெண் நுளம்பு. 16. பைலேரியாசிஸ் நோயை பரப்புவதற்குக் காரணியாக இருப்பது ; கியூலெக்ஸ் நுளம்பு. 17. குருதி ஒட்சியேற்றப்படுவது : சுவாசப்பைகளில்.

# 19

**பின்வருவன யாவை? அவை எவற்றைக் குறிக்கும்?**

1. பி சி. ஜி. ( B. C. G. ) : சயரோகத் தடை மருந்து.

2. பி. பி. சி. ( B. B. C. ) : பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்.

3. ஏ. ஐ. ஆர். ( A. I. R. ) : அகில இந்திய வானொலி.

4. எஸ். எல். பி. சி. ( S L. B. C. ) . ஸ்ரீலங்கா ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்.

5. தேசவழமை: இலங்கைத் தமிழர்களுக்குரிய சட்ட விதிகள்.

6. மயோரீஸ்: நியூசிலாந்து தேச பூர்வீகமக்கள்.

7. விப்ஜியோர் (VIBGYOR):வானவில்லில் காணப்படும் நிறங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சீ நோர் (CEY. NOR) இலங்கை—நோர்வே தேச கூட்டு முயற்சி நிறுவனம். இந் நிறுவனம் மீன்பிடி, பதனிடல், வலைநெய்தல், வள்ளம் கட்டல் ஆகிய துறைகளின் அபிவிருத்தியில் உழைக்கிறது.

9. இன்ரபொல்— (INTERPOL) சர்வதேச பொலிஸ் அமைப்பு.

10. மரிசுவானா, கெரொான், எல். எஸ். டி. : இவை போதை வஸ்துக்களின் பெயர்கள்.

11. ஆசியா நிறுவனம்: ஆசிய நாடுகளின் கல்வி கலாச்சாரப்பணிகளில் தொண்டாற்றும் அமெரிக்க கல்வி நிறுவனம்.

12. காபா: மெக்காவிலுள்ள புனித பள்ளிவாசல்.

13. கொன்டோர்: மிகப் பாரிய ஜெற் விமானம்.

14. கியரோகிலி பிக்ஸ்: புராதன எகிப்தியரின் எழுத்து வடிவம்.

15. ஸ்கொற்லண்ட் யாட்: பிரித்தானிய விசேட துப்புத் துலக்கும் பொலிஸ் பகுதி.

16. வொட்கா: ருஷியாவின் பொதுவான மதுபானம்.

17. சம்மட்டியும் அரிவாளும்: பொதுவுடைமைக் கட்சியின் சின்னம்.

18. எஸ். ஓ. எஸ். (S. O. S.) : சமுத்திரத்தில் ஆபத்தில் சிக்கிய கப்பல்கள் உதவிகோரி வயலெஸ் மூலம் அனுப்பும் அழைப்பு.

19 பெத்லகேம்: யேசுகிறிஸ்துநாதரின் பிறப்பிடம்.

20. ஹாலி வீதி: லண்டனில் பிரபல்யமடைந்த வைத்தியர்கள் வதியும் வீதி.

21. பிலீற் வீதி: லண்டனில் பத்திரிகையாலயங்கள் உள்ள வீதி.

22. சொபோர்ன்: பாரிஸ் நகரிலுள்ள சிறந்த பல்கலைக்கழகம்,

23. விம்பில்டன்: சர்வதேச ரென்னிஸ் ஆட்டங்கள் நடைபெறும் இடம்.

24. வெஸ்ற் மினிஸ்டர் தேவாலயம்: லண்டன் நகரிலுள்ள கீர்த்தி மிக்க தேவாலயம். இங்குதான் அரசரின் மகுடாபிஷேகம் விவாகம் போன்ற வைபவங்கள் நிகழும். மேலும் கீர்த்திமிக்க ஆங்கிலேயரின் நல்லடக்கமும் இங்கு நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பிக்பென்: பிரித்தானிய பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள பாரிய மணிக்கூடு. இம் மணிக்கூட்டைச் செய்தவர் பெஞ்சமின் ஹோல்

26. இரும்புத்திரை (Iron Curtain): ருஷியாவினதும் அதனைச் சேர்ந்த நாடுகளினதும் மர்மத்தை குறிக்கும் பதம். இப்பதத்தை முதன்முதலாக பிரித்தானிய நாட்டின் யுத்தகாலப் பிரதமர் சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில் பிரயோகித்தார்.

27. கொற் லைன் (Hot Line); அமெரிக்காவுக்கும் ருஷியாவிற்கும் உள்ள நேரடித் தொலைபேசித் தொடர்பைக் குறிக்கும். இரு நாடுகளும் எச் சந்தர்ப்பத்திலும் ஒன்றோடொன்று உடனுக்குடன் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பை இது அளிக்கும். இது 1963ல் ஏற்படுத்தப்பட்டது.

28. வெள்ளை அறிக்கை (White Paper): அரசாங்க அதி முக்கியம் வாய்ந்த எந்த ஒரு விடயத்திலும் புதிய மாற்றங்களை அல்லது சட்டங்களை ஆக்க முன்னர், அது பற்றி வெளிப்படுத்தும் விளக்கமான அறிக்கையை இது குறிக்கும்.

29. சூடான பணம் (Hot Mony); ஸ்திரமற்ற,பெறுமதி குறைந்து செல்லும் பணத்தைக் குறிக்கும்.

30. டியூரன்ட் கோடு (Durand Line): பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லையைக் குறிக்கும். இது 1893ல் எற்படுத்தப்பட்டது.

31. மக் மகோன் கோடு (Mac mahon Line): இந்தியா—திபெத் ஆகிய இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லை: இவ்வெல்லைக்கோடு 1914ல் ஏற்படுத்தப்பட்டது. அதனை இப்போ சீனா நிராகரித்துள்ளது.

32. ராட்கிலிப் கோடு (Radcliff Line); இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளினதும் எல்லைக்கோடு. 1947ல் அமைக்கப்பட்டது.

33. 38வது சமாந்தரம் (38th Parallel) வட—தென் கொரிய நாடுகளின் எல்லையைக் குறிக்கும். 1945ல் அமைக்கப்பட்டது.

34. ரோறி: பிரிட்டனிலுள்ள கொன்சவேற்றிவ் (பழமைப் பாதுகாப்புக் கட்சி) கட்சியின் உறுப்பினர்களைக் குறிக்கும் பதம்.

35. சினாகொக்: யூதர்களின் வணக்க ஸ்தலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நிப்பன்: யப்பானியரைக் குறிக்கும் பதம்

37. ஜோன் புல்: ஏகாதிபத்திய வேட்கையுள்ள ஆங்கிலேயரைக் குறிக்கும் பதம்.

38. பொமி: அவுஸ்திரேலிய வெள்ளையர்களை.

39. பாஷிசம்: 1919ல் இத்தாலிய சர்வாதிகாரி முசோலியின் அரசியல் தத்துவம். இத் தத்துவம் "அரசாங்கமின்றி, அரசாங்கத்திற் கெதிராக, அரசாங்கத்திற்கப்பால் எதுவுமே இருக்கமுடியாது" என்ற ஆபத்தான சர்வாதிகார தத்துவத்தை உடையது.

40. மாமா சாம்; (Uncle Sam) ஓர் அமெரிக்கரை.

41. ஷெயிக்: (Sheik) ஓர் அராபிய மன்னனை அல்லது செல்வமும் அதிகாரமுமிக்க ஆராபியனை. குறிக்கும் குவெய்த் நாட்டின் மன்னர் ஷெயிக் என அழைக்கப்படுவார்.

42. கேய்ஷா சிறுமி: யப்பானிய கவர்ச்சியான நடனச் சிறுமிகளை.

43. கெஸ்ராப்போ : ( Gestapo ): ஹிட்லர் ஆட்சியில் ஜேர்மனியிலுள்ள இரகசியப் பொலிஸ்.

44. K. G. B. : சோவியற் ருஷிய ஒன்றியத்தின் இரகசியப் பொலிஸ்.

45. கு கிளக்ஸ் கிளான்: (Ku Klux Klan) : அமெரிக்க கறுப்பர்களுக்கெதிராக அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோக்குடன் உருவாகிய தீவிர அமெரிக்க நிறத் துவேஷ வெள்ளையர்களின் இரகசிய ஸ்தாபனம். (இந்த ஸ்தாபனமே அண்மையில் நம் நாடு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற அரசுகளுக்கு லொஸ் ஏன்ஜலிசில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டிக்கு வீரர்களை அனுப்பினால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என்ற எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பியுள்ளனர் எனக் கூறப்படுகிறது. )

46. வைற் ஹோல்: (White Hall) பிரித்தானிய அரச செயலகங்கள் இங்குள.

47. உவால் ஸ்றீற் (Wall Street): மான் காற்றன், நியூயோர்க்கில் உள்ள பிரதான வீதி: அமெரிக்க நிதிச் சந்தையின் கேந்திர ஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. பென்ரகன் (Pentagon): உவாஜிங்ரன் நகரிலுள்ள அமெரிக்க இராணுவ தலைமைக் காரியாலயம்.

49. கிரெம்லின் (Kremlin): மொஸ்கோ நகரில் 100 ஏக்கரில் உள்ள அரண்; ருஷிய மன்னர்களின் பட்டாபிஷேகமும் அவர்கள் இறந்த பின் அவர்களின் அடக்கமும் இங்கேயே நடைபெற்றன. இன்று ருஷிய அரச செயலகமும் ருஷியத் தலைவர்களின் வாசஸ்தலமும் இங்கே அமையப் பெற்றுள்ளன.

50. பொற்கோவில்: சீக்கியர்களின் புனித ஸ்தலம். 1577ல் அமைக்கப்பட்டது; அமிர்தசரஸ் நகரிலுள்ளது. வெளிநாட்டு உல்லாச பயணிகளைக் கவரும் இடம் சீக்கிய பிரிவினைவாத பயங்கரவாதிகள் பலர் இக்கோவிலில் மறைந்திருந்து பயங்கர செயல்களில் ஈடுபட்டமையால், இக்கோவில் இந்தியத் துருப்புக்களால் முற்றுகையிடப்பட்டு அங்கு பலர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் முக்கியமானவர் சீக்கிய பயங்கர பிரிவினைவாதத் தலைவர் பிரிந்தன் வேல்

51. கிரோசிமா, நாகஷாகி: இரு யப்பானிய நகரங்கள். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் 1945ல் அணுகுண்டுத் தாக்குதலுக்கு இவ்விரு நகரங்களும் இலக்காகின.

52. மாபியா (Mafia): சர்வதேச பயங்கரவாத இயக்கம்.

53. மொகென் ஜோதாரோ; ஹரப்பா: இந்துநதிப்பள்ளத்தாக்கில் அழிந்த நிலையில் காணப்பட்ட புராதன நாகரீகம். இந்துநதி நாகரீகத்தின் தொன்மைக்கும் சிறப்புக்கும் சான்று பகரும் சின்னங்கள்.

54. ஹான்சாட்: உலகின் பாராளுமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் நிகழ்த்தும் உரைகளைக் கொண்ட ஏடு; முதன் முதலில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் அங்கத்தவர் நிகழ்த்திய உரைகளை ஹான்சாட் என்ற பெயரிலுள்ள தனியார் நிறுவனமொன்றே அரச அனுமதியுடன் பிரதிசெய்து வெளியிட்டது. பின்னர் இப்பணியை அரசு ஏற்றபின்னரும் ''ஹான்சாட்'' என்ற பெயராலேயே அவ் ஏடு இன்றுவரை எல்லா நாடுகளிலும் அழைக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

**உலக நாடுகளின் பிரதான அமைப்புகள்:**

**வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம் (NATO) :—**

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஐஸ்லாந்து, லக்சம்பேர்க், நெதர்லாந்து, நோர்வே, போர்த்துக்கல், கிறீஸ், துருக்கி, மே. ஜேர்மனி ஆகிய நாடுகளின் பாதுகாப்புக் கருதி ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இவ்வமைப்பிலுள்ள நாடுகள் தம் சுதந்திரம், இறைமை, பாரம்பரியத்தைக் காக்கவும், தமக்கு ஏதோ ஒரு நாட்டினால இராணுவ ஆபத்து வருங்கால் எல்லோரும் ஒரு அணியில் திரண்டு அவ்வகையான ஆபத்தை முறியடிக்க கூட்டு நடவடிச்கையில் இறங்கவும், ஐ. நா. சாசனத்திற் கமைய ஒழுகவும் மேற்கொண்ட அமைப்பே இதுவாகும். அமெரிக்கா தன் பேஜிங் (PERSHING) குறாயிஸ் (CRUISE) ஆகிய ஏவுகணைகளை இராணுவ முன் ஏற்பாடு கருதி இவ்வமைப்பிலுள்ள நாடுகளுக்கு வழங்கியுள்ளது.

**அணிசேரா நாடுகளின் அமைப்பு: (Non — Aligned Nations Conference)** ஆரம்பம்: செப்ரம்பர் 1961. இவ்வமைப்பில் மூன்றாம் உலக நாடுகளே பிரதான இடம் வகிக்கின்றன. ரூஷிய — அமெரிக்க வல்லரசுப் போட்டிகளைத் தவிர்த்தும், நியூக்கிலியர் ஆயுத உற்பத்திப் போட்டியை நீக்கி, உலக சமாதானம், மனித இன முன்னேற்றம் ஆகிய உயர்ந்த இலட்சியங்களைப் பேணிப் பாதுகாத்து, வளர்க்க இவ்வமைப்பு செயல்பட்டு வருகின்றது இதில் இலங்கை, இந்தியா, யூகோசிலேவியா, கியூபா, எகிப்து உட்பட 96 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இவை தமது உச்சி மகா நாட்டினை 3 ஆண்டுகளுக்கொருமுறை நடாத்துகின்றன.

**ஆபிரிக்க ஐக்கிய ஒன்றியம் (OAU—Organisation of African Unity):**

தென்ஆபிரிக்கா தவிர்ந்த ஏனை ஆபிரிக்க நாடுகளைக் கொண்டதே இவ்வமைப்பு. மே 1963ல் ஆரம்பிக்கப்பட்டது: இதன் தலைமைக் காரியாலயம் எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் உள்ளது இதன் நோக்கம்: தென் ஆபிரிக்காவின் நிறத்துவேஷ ஆட்சியை முறியடித்து சகல ஆபிரிக்க நாடுகளின் சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் அபிவிருத்திக்கும் ஓர் அணியில் நின்று உழைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழும்புத் திட்டம் (C. Plan — Colombo Plan):** தெற்கு, தென் கிழக்காசியா நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை சகல வழிகளிலும் அபிவிருத்தியடையச் செய்வதற்கென 1950 இல் கொழும்பு நகரில் இப் பிராந்தியத்திலுள்ள எட்டு பிரித்தானிய பொதுநல அமைப்பைச் சேர்ந்த நாடுகளால் தோற்றுவிக்கப்பட்டது. இன்று இதில் பிரிட்டன், அமெரிக்கா, யப்பான் உட்பட 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இத்திட்டத்தை ஆரம்பத்தில் உருவாக்குவதில் நம் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெவார்த்தன அன்று முன்னோடியாக இருந்துள்ளார். கொழும்புத் திட்டத்தின் கடைசி மகாநாடு யூலை மாதம் 1984 ல் கொழும்பில் நடந்தேறியதை கருத்தில் கொள்க.

**ஐரோப்பிய பொருளாதார சமூக சபை (The Europeon Economic Community Commission – EEC) பற்றி அறிந்திருக்க வேண்டிய பிரதான விபரங்கள்:**

1. இதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தொகை : 12

2. அவையாவன: பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துக்கல், கிறிஸ், அயர்லாந்து, பெல்ஜியம், லக்சம்போர்க், டென்மார்க்

3. ஸ்தாபிதம் : 1958

4. ஐரோப்பிய சமூக நாடுகளின் பாராளுமன்றம் அமைந்துள்ள இடம் : ஸ்ராஸ்பேர்க் (Strasburg)

5. ஐ. பொ. ச. இன்றைய சபைத் தலைவர் யேக்ஸ் டிலோர்ஸ் (Jaques Delors)

6. ஐ. பொ. ச. அமைப்பின் நோக்கம்

   அ. தனவந்த நாடுகள் வறிய நாடுகளுக்கு உதவியளித்தல்

   ஆ. அனைவருக்கும் பொருத்தமான முரண்பாடற்ற வெளிநாட்டுக் கொள்கை

   இ. பாதுகாப்பு

   ஈ. சமூக சாசனம்

   உ. பொதுவான குடிவரவு, குடியகல்வு விதிகள்

   ஊ. பொதுவான பாராளுமன்றம் மூலம் தீர்மானம் எடுத்தல், அனுஷ்டித்தல்

   எ. அங்கத்துவ நாடுகளின் சந்தை, வர்த்தக நலன்களை மேம்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொதுவான நாணயம்

ஐ. அங்கத்துவ நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி

7. ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் தலைவர்கள் மிக அண்மையில் தம் மகாநாட்டினை நடாத்திய இடம் ; மாஸ்ரிறிக்ற் (Maastricht) (ஒரு டச்சு நகரம்)

**உலகின் சில பிரதான நாடுகளும் அவற்றின் தலை நகரங்களும் :**

| | |
|---|---|
| அப்கனிஸ்தான் — காபுல் | அல்ஜீரியா — அல்ஜியர்ஸ் |
| அவுஸ்திரேலியா — கன்பெரா | ஆஸ்திரியா — வீயன்னா |
| ஆஜென்ரீனா — பொனஸ் அயர்ஸ் | வங்களாடேஷ் — டக்கா |
| பெல்ஜியம் — பிறசெல்ஸ் | பூட்டான் — திம்பு |
| பிரேசில் — பிராசிலியா | பல்கேரியா — சோபியா |
| கம்போடியா — நொம்பென் | கனடா — ஒற்றவா |
| யப்பான் — ரோக்கியோ | ஜோர்டான் — அம்மான் |
| கென்யா — நைரோபி | கியூபா — கவானா |
| கொஸ்ராறிக்கா — சான் யோசஸ் | டென்மார்க் — கொப்பனெய்கன் |
| ஜேர்மனி — பொன் | கானா — அக்ரா |
